
குழந்தைகள் பத்திரிகை
25-5-1975
50 காசு

கோகுலம்





பெரியவளாகி உங்களை விட்டுப் பிரிந்த நெடுங்காலத்திற்குப் பின்பும் புகைப்படம் அவளை மறவாது.



ஒவ்வொரு 120 ரோல் பிலிம் சுருளுக்கும், உங்களுக்கு 12பெரிய (6x6) புகைப்படங்கள் கிடைக்கும். தனி விலைக்கு ஒரு விசேஷ தோலுறை போர்ட்ரெய்ட் லென்ஸ் மற்றும் ... கிடைக்கின். நல்ல துல்லியமான பிரிண்டுகளுக்கும் என்லார்ஜ்மெண்டுகளுக்கும் ஆக்பா-கேவர்ட் போட்டோ பேப்பர்களே வேண்டுமென வற்புறுத்துங்கள். அங்கீகாரம் பெற்ற எல்லா ஆக்பா-கேவர்ட் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

AGI

ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவர்ட் இந்தியா லிமிடெட்.,
மார்ஷல் ஹவுஸ், 41, ... பம்பாய் 400 0..

தயாரிப்பாளர்கள்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

Agfa

SIMOES/AG/2/75 TAM

கோகுலம்

மலர் 4 □ இதழ் 4

மே 25, 1975 : ராட்சஸ, வைகாசி 11



சந்தா விவரம் :


உள்நாடு : ஒரு வருடம் ரூ. 13-00
ஆறு மாதம் ரூ. 6-50
வெளிநாடுகள்: ஆண்டுச் சந்தா ரூ. 27-50

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்



(இதன் விடைகள் 12-ம் பக்கத்தில்)


□ ஒரு மீனே தனக்கு வேண்டிய உணவான மீன்களைத் தூண்டில் போட்டுப் பிடிப்பதைக் கேட்டிருக்கிறீர்களா? இதோ அருகில் இருப்பது ஒரு விசித்திரமான மீன். வாய்மேலுள்ள தூண்டில் போன்ற உறுப்பினால் பெரிய மீன்களைக் கூடப் பிடித்து இது கபளீகரம் செய்யும். மூன்றடி முதல் ஐந்தடிவரை உள்ள இவை எங்கே காணப்படுகின்றன? பெயர் என்ன?





□ எந்த யுத்தகளத்தில் எடுத்த படம் இது? எந்தத் தேசத்து டாங்கிகள் இவை? சொல்ல முடியுமா?

□ இரு பக்கமும் கூர்மை கொண்ட மிகவும் கனமான இந்த வாள் தோற்றத்தில் பயங்கரமாக இருந்தாலும் இதனால் சண்டையிட மாட்டார்கள். **கண்டா** *(Khanda)* என்ற பெயர் கொண்ட இந்த வாளைக் கையாண்டவர்கள் யார்?



□ இந்தக் கிரேக்கத் தத்துவ ஞானி. கி. மு. 470ல் பிறந்தவர். இவர் எந்த விதமான நூலும் எழுதவில்லை. இவருடைய போதனைகளை இவரது சீடர்களே உலகுக்கு வழங்கினார்கள். சிறைச்சாலையில் கொடுத்த விஷத்தைத் தாமே வலியக் குடித்து உயிர்நீத்த இவருடைய பெயர் தெரியுமா?



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

4. அடக்கம் வாழ்வு தரும்

ஒருவன் உய்வு பெற வேண்டுமாயின் அடக்கமாக இருக்க வேண்டும். அடக்கமாக உள்ளவன் வாழ்வு பெறுவான்.

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்

என்பது வள்ளுவரது வாக்கு.

நதிகள் அனைத்தும் கடலில் போய்ப் புணரும். அதனால் கடலுக்குப் புணரி என்ற ஒரு பேருண்டு.

கங்கை, யமுனை, கோதாவரி, காவேரி என்ற மகாநதிகள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக் கடலுடன் கலக்கும் போது, அந்நதிகளின் கரையில் உள்ள வானளாவிய மரங்களை வேருடன் சாய்த்துக் கடலில் சேர்க்கும்.

சமுத்திர ராஜா தனக்குள் சிந்தித்தார். ''இந்த நதிகள் தன் கரைகளில் உள்ள மரங்களை அலைகளாகிய கரங்களால் நீர் வார்த்துக் குழந்தைகளைப் போலவே வளர்க்கின்றன. அப்படி வளர்த்த மரங்களை இப்படி வேரோடு கல்லிப் பேர்த்து நம்மிடம் சேர்க்கின்றன. ஆனால் நதிக் கரைகளில் உள்ள நாணல் புற்களும், தருப்பைப் புற்களும் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு வருவதில்லை. இதற்கு என்ன காரணம்?''

ஒரு நாள் நதிகளுக்கெல்லாம் தாய் போலவும், அரசி போலவும் விளங்குகிற கங்கா நதியைப் பார்த்துக் கடலரசனை சமுத்திரராஜன் கேட்கலானான்: ''ஏ, கங்கா நதியே! நீ புனிதமான நதி. மனித குலத்தை வாழச் செய்கின்றாய். உன்னால் பயிர்களும் உயிர்களும் தழைக்கின்றன. உன் மகிமை அளவிட முடியாதது. நீயும் உன் இனமான நதிகளும், உங்கள் கரைகளில் உள்ள மரங்களை, உங்கள் அலைக் கரங்களால் நீர் வார்த்து வளர்க்கின்றீர்கள். இப்படிப் பல காலம் வளர்த்த உங்கள் குழந்தைகளான மரங்களை வெள்ளத்தில் அடியுடன் பெயர்த்துக் கொண்டு வந்து என்னிடம் சேர்க்கின்றீர்கள். ஆனால் உங்கள் அருகில் உள்ள நாணற் புற்களையும், தர்ப்பைப் புற்களையும் வெள்ளத்தில் கொணர்வதில்லை. இதற்குக் காரணம் யாது?'' என்று வினவினான்.

கங்காமாதா கூறுகின்றாள். ''கடல் அரசனே! இதன் காரணம் உனக்கு விளங்கவில்லையா? விளங்குமாறு விளம்புகின்றேன், கேள். எங்கள் கரையில் உள்ள விருட்சங்களை நாங்கள்தான் தண்ணீர் பெய்து வளர்க்கின்றோம். ஓடி வருகின்ற போது அம்மரங்கள் எங்களைக் கண்டு வணங்க வேண்டாவோ? வணக்கம்தானே உயர்வுக்குக் காரணம்? ஏற்றம் கிணற்றில் உள்ள நீரை வணங்கியே மொள்ளுகின்றது. நாங்கள் வெள்ளமாக வருகின்ற போது, நாணற் புற்களும், தருப்பைப் புற்களும் எங்களைக் கண்டு அம்மா என்று வணங்கி எங்கள் மடியில் தாழ்கின்றன. அவ்வாறு வணங்கிய அவைகளை வாழ வைக்கின்றோம். எங்களைக் கண்டு கர்வத்துடன் நிமிர்ந்து நிற்கின்ற விருட்சங்களை வேருடன் கிளப்பிக் கொண்டு வருகின்றோம். வணங்கினவன் வாழ்வான்; நிமிர்ந்தவன் அழிவான்'' என்று அழகாகக் கூறினான்.

வணக்கமும் அடக்கமும் ஒருவனுக்கு வாழ்வு தரும்.



சிங்கம் கர்ஜிக்கவில்லை!





சிங்க ராஜா சிரிக்கவே இல்லை. ஏன், அவர் கோபம் கொள்ளவுமில்லை. மிருக ராஜனிடம் மிடுக்கில்லை, கம்பீரமில்லை. கர்ஜிக்கக்கூட இல்லை அவர்!


என்ன காரணம் என்று யாருக்கும் புரியவுமில்லை. அந்த மிருகக் காட்சி சாலையில் சிங்க ராஜாவுக்கு எந்தக் குறையுமில்லை. செயற்கையாக ஒரு குகையை உருவாக்கிக் கொடுத்திருந்தார்கள். நிம்மதியாக அதற்குள் போய்ப் படுத்துக் கொள்ளலாம். கானகத்துச் சூழ்நிலையைக் கொஞ்சமும் மாறுபடாமல் உருவாக்கிக் கொடுத்திருந்தார்கள், மிருகக் காட்சி சாலை அதிகாரிகள். வேளா வேளைக்கு ஆகாரம். நிம்மதியாக இருக்கலாமே?

ஆனாலும் சிங்க ராஜா உற்சாகமாக இல்லை. உறுமவில்லை. உணவை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சதா சர்வ காலமும் வானத்தை அண்ணாந்து பார்த்தபடி பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். சிங்க ராஜாவின் முதுகில் மிருகக் காட்சி சாலைக்கு வரும் குழந்தைகள் ஏறிச் சவாரி செய்தன. அப்போதும் அது பரம சாதுவாகச் சோகமே உருவாக உலாவியது. கம்பீரமாகக் கர்ஜிக்கவில்லை. பிடரியைச் சிலிர்த்துக் கொண்டு ஹூங்காரமிடவில்லை. மிருகக் காட்சி சாலை அதிகாரியின் அன்பு மகன் அமர் வந்தான். சிங்கராஜாவின் அன்புக்குப் பாத்திரமானவன் அமர். அவனைக் கண்ட போதும் சிங்க ராஜா சிரிக்கவில்லை. கர்ஜித்துத் தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்கவுமில்லை.

மிருக ராஜாவின் இந்த மோசமான நிலையைக் கண்டு கவலை கொண்ட காட்சி சாலை நிர்வாகிகள் மிருக வைத்தியரை அழைத்து வந்தார்கள். அவர் வந்து பரிசோதித்து விட்டு, ''இந்தச் சிங்கப் பயலுக்கு உடம்பில் ஒரு வியாதியும் இல்லை. வாலிப முறுக்கும் வலுவான உடம்பும்'' என்று கூறி ஏதோ மாத்திரையைக் கொடுத்து விட்டுப் போனார். ஆனாலும் சிங்க ராஜாவின் சோக நிலை மாறவே யில்லை.

சிங்க ராஜா 'புஸ்' என்று பெருமூச்சு விட்டார். ''நானும்தான் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறேன், இங்கு வசிக்கும் மிருகங்களோ, வரும் மனிதர்களோ தனித்தா இருக்கிறார்கள்? அதோ அங்கே ஒட்டக அண்ணா தன் கொட்டிலில் நின்று கொண்டிருக்கிறாரே, தனியாகவா? இல்லை. ஒட்டக அண்ணியின் முகத்தோடு முகம் உரசிக் கொண்டு தானே நிற்கிறார்!

''ஹிப்போ மாமா நீரிலே மூங்கி மூங்கிக் கூத்தடிக்கிறாரே தனியாகவா? இல்லையே, அருகில் ஹிப்போமாமியும் அவர்களுடைய ஹிப்பிக் குட்டியும் இல்லையா? அதோ கரடித் தாத்தா மட்டும் என்னவாம்? பாட்டியாருடன் விளையாடிக் கொண்டு தானே இருக்கிறார். வரிக் குதிரைத் தம்பி தன் கேர்ல் ஃப்ரெண்டின் கழுத்து மீது தன் தலையைப் பதியவைத்துக்கொண்டு சூழ்நிலையையே மறந்து நின்று கொண்டிருக்கவில்லையா? என்னைப் போலத் தனியாகவா தவிக்கிறான்? இங்கு வேடிக்கை பார்க்க வருகிறவர்களெல்லாம் குழந்தை குட்டிகளோடு தானே வருகிறார்கள்? யார் தனியாக வருகிறார்கள்? அவ்வளவெல்லாம் போவானேன்? என் இருப்பிடத்தில் சிதறிக் கிடக்கும் உணவைக்



கொரிக்க ஓடி வருகிறதே கண்டெலி, அதுகூடவல்லவா தன்னோடு ஒரு 'துணை'யையும் அழைத்துக் கொண்டு வருகிறது !

''நான்மட்டும் என் வீட்டில் ஏன் தனியாக இருக்கணும்?'' சிங்க ராஜாவுக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. அதன் கூம்பிய முகமும் பெருமூச்சும் அதன் வேதனையைக் காட்டின.

ஒரு நாள் சர்க்கஸ் கம்பெனியொன்று மிருகக் காட்சி சாலையை அடுத்துள்ள மைதானத்தில் முகாமிட்டது. சிங்க ராஜா, சிங்கத்தின் குணத்தோடில்லாமல் இருந்ததினால் அதனிடம் யாருக்குமே பயமில்லாமல் போயிற்று. வளர்ப்பு நாயைப் போல அதை அமர் தன்னுடன்எங்கும் அழைத்துப்போனான். அன்று சிங்க ராஜாவுடன் சர்க்கஸுக்குப் போனான் அமர். அந்தரத்திலே பறந்து பார் விளையாடினார்கள் அழகிகள். கரடிகள் மோட்டார் சைக்கிள் விட்டன. யானைகளும் புலிகளும் சின்னச் சின்ன ஸ்டூல்களில் உட்கார்ந்து வித்தை காட்டின. சிங்க ராஜா இவை எதையும் பார்க்கவில்லை. இவை எதுவும் அதன் கவனத்தைக் கவரவுமில்லை.

ஒரு சிவப்புக் கூண்டின் முன்னால் பேசாமல் உட்கார்ந்து கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அப்படி அந்தக் கூண்டில் என்னதான் இருந்தது? பூனைக் குட்டி கால்களை மடக்கிக்கொண்டு உட்காருமே அந்த மாதிரி தன் மெத்தென்ற பாதங்களை மடித்துக் கொண்டு ஓர் அழகான சிங்க ராணி அங்கு உட்கார்ந்திருந்தாள். கவர்ச்சி மிக்க பச்சைக் கண்கள், பாதி மூடிய நிலையில். மஞ்சள் உடம்பு... ஓ! ரொம்ப அழகாகவே இருந்தாள் சிங்க ராணி. மிருக ராஜாவுக்கு ஏற்ற மிருக ராணி. சிங்க ராஜாவைக் கண்ட அந்த அழகு ராணி தன் கண்களை மூடிக்கொண்டாள்—முழுவதுமாக இல்லை. கொஞ்சமான இடைவெளி வழியே அழகு ராஜாவைப் பார்த்துக் கொண்டுதானிருந்தாள் அழகு ராணி!

சர்க்கஸ் முடிந்து அமர் வெளியே வந்தான். வீட்டுக்குப் போகச் சிங்க ராஜாவைக் கூப்பிட்டான். சிங்க ராணியையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த சிங்க ராஜா நகரவில்லை. அமர் அதைத் தட்டி அழைத்தான், உலுக்கிக் கூப்பிட்டான். குலுக்கி இழுத்தான்.. சிங்க ராஜா அசையவில்லை. ரொம்ப ரொம்ப நேரத்துக்குப் பிறகு அமரின் தொல்லை தாளாமல் அரை மனத்தோடும், நீண்ட பல பெருமூச்சுக்களோடும் ஒரு வழியாகக் கிளம்பினார் சிங்க ராஜா.

மறுநாளும் அமர் சிங்கராஜாவுடன் சர்க்கஸ் கூடாரத்துக்குப் போனான். அமர் கூடாரத்தினுள்ளே பார் விளையாட்டையும் மற்றும் பல வேடிக்கைகளையும் ரசித்துக் கொண்டிருந்தான். சிங்க ராஜா வெளியே சிங்க ராணியையே வைத்த கண்ணை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். ராஜா ராணியுடன் என்ன பேசினாரோ ராணி ராஜாவிடம் என்ன கூறினாளோ தெரியாது. அன்று இரவு சிங்க ராஜாவிடமிருந்து ஏக்கப் பெருமூச்சுக்கள் வெளிப்படவில்லை. முழு நிலா நடுவானத்துக்கு வந்தபோது சிங்க ராஜா தம் குகை வீட்டிலிருந்து வெளியே வந்தார். கதவுகளின் தாளை நீக்கவும் போடவும்





அவருக்குத் தெரியும். இருள் படிந்த பகுதிகள் வழியாக மெள்ள மெள்ளச் சர்க்கஸ் முகாமுக்குப் போனார். அங்கு இவரது வரவை எதிர்பார்த்துக் கொண்டு சிங்க ராணி காத்திருந்தாள். ராஜா கூண்டின் கதவைத் திறந்தார். ராணி கூண்டிலிருந்து வெளியே குதித்தாள். இருவரும் இருள் சூழ்ந்த பகுதிகள் வழியாக மிருகக் காட்சி சாலைக்குள் ஓசையின்றி நுழைந்தார்கள். காட்டுப் பறவைகளோ, கொட்டமடிக்கும் குரங்குகளோ விழித்துக் கொண்டு விடாதபடிக்கு மெதுவாக நடந்துசென்றார்கள். ராஜா ராணியைத் தம் வீட்டுக்குள் கூட்டிப் போனார். தம் செயற்கைக் குகை வீட்டுக்குள் அவளை மறைத்து வைத்தார்.

காலையில் சர்க்கஸில் ஒரே அமளி. காட்டு மிருகங்களை ஆட்டுவிக்கும் கங்காதரன், சிவப்புக் கூண்டிலே சிங்க ராணியைக் காணாமல் குதித்தார். கூப்பாடு போட்டார். எல்லாரும் ஓடோடி வந்தார்கள். அங்கும் இங்கும் எங்கும் தேடினார்கள். எவ்விடத்திலும் சிங்க ராணியைக் காணவில்லை. காணாமல் போன சிங்க ராணியைத் தேடி அலைந்தவர்கள் மிருகக் காட்சி சாலையினுள்ளும் வந்தார்கள். மூலை முடுக்கெல்லாம் தேடினார்கள். காட்டுப் பறவைகளின் கூட்டிலே, யானைக்கொட்டடியிலே, ஹிப்போவின் குட்டையிலே, ஏன், சிங்க ராஜாவின் குகையிலே கூடத் தேடினார்கள். சிங்க ராஜாவின் குகை வீட்டிலே அவர்கள் கண்டது என்ன தெரியுமா? குகை வாசலிலே ராஜா சாதுவாக, அரைக்கண் மூடியபடி ஏதுமே அறியாத அப்பாவியைப் போல் உட்கார்ந்து கொண்டிருந்ததைத்தான்.

''சிங்க ராணி இங்கு இல்லை'' என்றார் போலீஸ்காரர்.

''இங்குமில்லையே...?'' என்றார் சர்க்கஸ் முதலாளி.


''இங்குமா இல்லை? பின் எங்குதான் போயிற்று?'' என்றார் கங்காதரன்.

இப்படி ராணியைத் தேடி வந்தவர்கள் நம்பிக்கை இழந்து திரும்பப் போகும் சமயத்தில் மிருகக் காட்சி சாலைக்கு வேடிக்கை பார்க்க வந்திருந்த ஒரு சின்னப் பெண்! **"ஓ! அதோ பாருங்கள் இந்தச் சிங்கத்துக்கு இரட்டை வால்!"** என்று கூவினாள்.

உண்மைதான்! சிங்க ராஜாவுக்கு இரண்டு வால்கள் இருந்தன! குகையின் முன்னால் குந்திட்டு உட்கார்ந்திருந்த சிங்க ராஜாவின் இடது பக்கத்திலே ஒரு வால் — நுனியில் குஞ்சத்துடன். வலது பக்கத்திலே வழவழவென்று சாட்டை போல் இன்னொரு வால் நீண்டு கிடந்தது!

''இது என் சிங்க ராணியினுடைய வால் அல்லவா?'' என்று வீறிட்டார் கங்காதரன். நிஜம்தான். அது சிங்க ராணியின் அழகான வால்தான். அதன் மறு கோடியில் சிங்க ராணி சிங்க ராஜாவுக்குப் பின் பக்கத்தில் சுகமாக சுருண்டு படுத்திருந்தாள்!

காட்டு விலங்குகளை ஆட்டி வைக்கும் கங்காதரன் சிங்க ராஜாவின் குகை வீட்டை நோக்கி ஓடினார், ராணியை மீட்டு வர. ஆனால் அடுத்த விநாடி அலறி அடித்துக் கொண்டு பின் வாங்கினார். ஏன்? மிக மிகப் பெரிய, மிக மிக கம்பீரமான, மிக மிகப் பயங்கரமான ஒரு கர்ஜனை சிங்க ராஜாவிடமிருந்து வெளிப்பட்டதுதான்! அத்தனை பலமாக, அத்தனை கம்பீரமாக அத்தனை பயங்கரமாக அதுவரை சிங்க



ராஜா கர்ஜித்ததே இல்லை. காட்சி சாலையே கலகலத்துப் போயிற்று. சிங்க ராஜாவின் சிமிண்டுக் குகை ஆடிற்று. காட்சி சாலையிலிருந்த காட்டு மரங்கள் குலுங்கின. காட்டு மிருகங்களை ஆட்டுவிக்கும் கங்காதரனே கலங்கிப் போனார்.

''கங்காதரன் சார்! தயவுசெய்து சிங்க ராணியை இங்கிருந்து கொண்டு போய்விடாதீர்கள். சிங்க ராஜா ஏன் இத்தனை நாட்களாக அப்படி சோகமாக, சோம்பேறியாக இருந்தார் என்று இப்போதுதான் புரிகிறது. தனிமைதான் அவரை அந்தப் பாடு படுத்தியிருக்கிறது'' என்றான் அமர்.

''என் சிங்க ராணியை இங்கே விட்டுப் போவதா?'' என்று கிறீச்சிட்டார் கங்காதரன். ''நெருப்பு வளையத்தினுள் தாவிப் புகுந்து யார் வெளி வருவதாம்!''

''அதென்னவோ, சிங்க ராஜா, ராணியை இங்கிருந்து அப்புறப்படுத்த அனுமதிக்க மாட்டார். அது நிச்சயம்'' என்றான் அமர்.

சர்க்கஸ் முதலாளியைக் கங்காதரன் பார்த்தார். முதலாளி மிருகக் காட்சி சாலை அதிகாரியைப் பார்த்தார். யாருக்கும் என்ன செய்வது, எப்படிச் செய்வது என்று புரியவில்லை. குழம்பினார்கள். கடைசியில் எல்லோரும் கூடிப் பேசவதென்று முடிவாயிற்று. எது எப்படியானாலும் சிங்க கர்ஜனை அமருக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

கூட்டம் போட்டார்கள், கூடிப் பேசினார்கள். ''சிங்க ராஜாவுக்குச் சிங்க குணம் திரும்பியது சிங்க ராணியினால்தான். ஆகவே எங்கள் சிங்க ராஜாவுடன் சிங்க ராணி நிரந்தரமாகத் தங்கியிருக்கட்டும். நீங்கள் வேறு சிங்கியை வாங்கிக் கொள்வதற்கு நாங்கள் தேவையான பணத்தைக் கொடுத்து விடுகிறோம். நெருப்புவளையத்துக்குள் புகுந்து குதிக்க அதற்குப் பழக்கிக் கொடுங்கள்'' என்றார் மிருகக்காட்சி சாலை அதிகாரி.

வேறு வழியின்றிச் சர்க்கஸ் முதலாளி அவர் கொடுத்த பணத்துடன் பெண் சிங்கம் வாங்கி வர அன்றே ரயிலேறினார்.

சிங்க ராஜா தம் அருமை மனைவி சிங்க ராணியோடு தமது சிமிண்டுக் குகை வீட்டிலே ஆனந்தமாக வாழ்க்கை நடத்துகிறார். இப்போதெல்லாம் ஆகாயத்தைப் பார்த்து அவர் பெருமூச்சு விடுவதில்லை. அதிகாரி மகன் அமர் வந்தால் சோகமே உருவாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பதில்லை. இப்போதெல்லாம் ராஜாவைப் போலவே ராணியும் அமர் வந்தால் கம்பீரமாகக் கர்ஜித்து வரவேற்கிறான்!

அட்டையில்......

அண்ணன் :

அன்னக் கிளியே
சின்னப் பொண்ணே
ஆப்பிள் சாப்பிடு!

தங்கை :

அண்ணாக் கண்ணே
ஆளுக்குப் பாதி
அரிந்து சாப்பிடலாம்.

வண்ணப்படம் : புஷ்பத்துரை சுப்பிரமணியம்



மலையும் மனிதனும்

(எதிரொலிக் கவிதை)

மனிதன்: கல்லென்றொலித்திடும் கருமலையே — சில
கேள்விகள் கேட்டிட நான் வரவா?

மலை: வா! வா! வா!

மனிதன்: சுற்றிச் சுற்றித் தினம் தினம் — ஒளிர்
சூரியன் எவ்வழி ஏகுவான்?

மலை: வான்! வான்! வான்!

மனிதன்: வெற்றி இழந்த நான் மறுபடி — தேர்வில்
வெற்றி பெறுவது எப்படி?

மலை: படி! படி! படி!


மனிதன்: உன்னிடம் இனிப்பது என்னவென்று — நீ
உரைத்திடுவாயென நான் வந்தேன்!

மலை: தேன்! தேன்! தேன்!

மனிதன்: பெண்ணைத் தாழ்வுறச்செய்வது-எதுவென
பெருத்த மலையே நீ சொல்வாய்!

மலை: வாய்! வாய்! வாய்!

'சிறுகவி'



வானவில்



அண்ணா இங்கே வாராய்!
அதோ வானில் பாராய்!
என்னே அழகு ஜோராய்!
ஏழு வர்ணம் சீராய்!


ஊதா, கருமைப் பழுப்பு,
உயர்ந்த நீலம், பச்சை!
தோதா மஞ்சள், ஆரஞ்சு!
துல்லிய மான சிவப்பு!

இரண்டு வில்லும் காணுதே!
எனினும் உள்ள வர்ணமோ
முரணாய் மாறித் தெரியுதே!
முனைந்து பார்த்தால் புரியுதே!

ஒழுகும் மழைத் துளியினில்
ஊடே ஒளியும் புகுவதால்,
அழகு வான வில்லுமே
அருமை யாக அமைந்ததே!

"கோமதி"

அப்பாவின் கோபம்!



அப்பாவுக்குக் கோபம் வந்தால்
அனல் பறக்குது — எங்க
அம்மா கண்ணு சிவந்துபோயி
கண்ணீர் வடிக்குது!

கப்பல் கவிழ்ந்து போவதுபோல்
மனுஷன் குதிக்கிறர் — எம்மைக்
காட்டுயானை போல் பிளிறி
மிரட்டி வதைக்கிறர்.

'ரேஸர் செட்'டை எங்கே காணும்?
என்றே தேடுவார் — எந்தன்
பட்டுக் கன்னம் சிவக்க அறைந்து
'பாத்ரூம்' ஓடுவார்!

''ஆபீஸ்சாவி எங்கே கழுதை?''
அலறிக் கத்துவார் — 'பர்ஸில்'
ஆர் எடுத்தார் பத்து ரூபாய்?
என்னை மொத்துவார்!

பேனஎங்கே? பென்சில் எங்கே
வாடா இங்கென்பார்! — பின்னர்
பிடரியிலோர் அறை கொடுத்துப்
போடா அங்கென்பார்!

இவரைமிரட்டி அடக்கி வைக்க
யாரும் இல்லையே! — இவர்
எம்மைப் போட்டுப் படுத்தும்பாடு
பெரிய தொல்லையே!

எங்க அப்பா கோபம் இனியும்
என்று தணியுமோ? — இவரை
எதிர்த்துப் பேச அம்மா மனசு
எப்போ துணியுமோ?

—சக்திக் கனல்—

வளையல்காரர் வருகிறர்



வளையல்காரர் வருகிறர்
வாங்கஓடி -வாருங்கள்!
தங்கமான கைகளில்
தக்கவிதத்தில் போடலாம்
வானவில்லின் நிறங்களில்
வளையல்அடுக்கி மகிழலாம்!
பட்டுப்போன்ற கைகளில்
பளபளப்பாய் போடலாம்!

—ஸ்ரீஜெயந்தி—

க்ளாடியஸ் காலன்

கௌசிகன்

1800 ஆண்டுகளுக்கு முன்னால் ஒருநாள். பாரசீகத் தத்துவ ஞானி ஒருவர் ரோமானிய வைத்தியர் ஒருவரிடம் வந்தார். தன்னுடைய ஒரு கையிலிருந்த கடைசி இரு விரல்களை அந்த டாக்டரிடம் காட்டி, ''இவ்விரு விரல்களிலும் இயற்கையான ஸ்பரிச உணர்வு இல்லை. என்ன காரணம்?'' என்று கேட்டார். ரோமானிய வைத்தியர் தத்துவ ஞானியைச் சோதித்துக் கொண்டிருக்கும்போது நோயாளியான ஞானி, இந்த நோய்க்காகத் தாம் மற்ற வைத்தியர்களின் ஆலோசனைப்படி செய்து கொண்ட சிகிச்சை முறைகளை விவரித்துக் கொண்டிருந்தார். வீக்கங்களுக்கு வைத்துக் கட்டுவதற்குத் தயாரித்த மாவு. (நாம் மாவு கிளறி வைத்துக் கட்டுவதில்லையா, கட்டிகள் கொப்புளங்கள் உடைய அதுவேதான். இதற்குப் போல்டிஸ் *(Poultice)* என்று பெயர்.) களிம்புகள், மாந்திரீகம் ஆகியவற்றைப் பற்றியெல்லாம் சொல்



லிக் கொண்டிருந்தார். அவைகளைக் கேட்டுப் புன்முறுவலித்தார் ரோமானிய வைத்தியர். தம்முடைய சோதனையை முடித்த அவர் பிறகு கேட்டார்: ''உங்களுக்கு முதுகில் எப்போதாவது அடி பட்டதுண்டா?''

''இல்லையே'' என்றவர், சிறிது யோசனைக்குப் பிறகு, ''ஆ, இப்போது நினைவுக்கு வருகிறது. உண்மைதான். சில ஆண்டுகளுக்கு முன்னால் கீழே விழுந்தேன். அப்போது ஒரு கல்லில் முதுகு அடிபட்டது. அது சரி, அந்த நிகழ்ச்சிக்கும் என் விரல்கள் உணர்வற்றுப் போயிருப்பதற்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டார் தத்துவ ஞானி.

''சம்பந்தம் இருக்கிறது. முதுகில் பட்ட அடி உங்கள் முதுகெலும்பின் ஊனில் — மஜ்ஜையில் — கழுத்துப் பக்கம் உள்ள ஏழாவது முள்ளெலும்பில் வீக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. அந்த இடத்திலிருந்துதான் ஒரு முக்கியமான நரம்பு *(Cubital Nerve)* ஆரம்பமாகிறது. இந்த நரம்பு உங்கள் கையில் அந்தக் கடைசி இரண்டு விரல்களின் நுனி வரை போகிறது. இப்போது புரிகிறதா? அன்று முதுகில் பட்ட அந்த அடிக்கும் இப்போது இந்த விரல்கள் சொரணை இழந்திருப்பதற்கும் காரணம் இருக்கிறது என்று?''

இந்தச் சம்பவம் நடந்தது. கி.பி. 171ல் இப்படி விளக்கம் கொடுத்த வைத்தியரின் பெயர் **க்ளாடியஸ் கேலன்** *(Claudius Galen)* இன்று நன்கு தேர்ச்சி பெற்ற ஒரு டாக்டர் விஞ்ஞான ரீதியில் இட்டவட்டமாகச் சொல்லக்கூடியதொரு முடிவை அன்றே கூறியவர் இந்தக் கேலன்.

க்ளாடியஸ் கேலன் என்பவரை ரோமானிய வைத்தியர் என்று கருதப் பட்டாலும் இவர் பிறந்தது பெர்காமம் *(Pergamum)* என்ற இடத்தில், கி. பி. 129ல். இது துருக்கி நாட்டின் மத்திய தரைக் கடல் பகுதியில் உள்ளது. இது நெடுங் காலம் கிரேக்க சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டிருந்தது. ஆனால் கி. பி. 133ல் இது ரோம சாம்ராஜ்யத்துடன் இணைக்கப் பட்டது. ஆகவே, கேலனை நாம் கிரேக்க ரோமானியர் என்று அழைப்பதில் தவறில்லை.

பெர்காமமில் கேலன் தத்துவமும், மருத்துவமும் பயின்றார். அந்தக் காலத்தில் இவ்விரு கலைகளுக்கும்தான் மிகுந்த மதிப்பும் வரவேற்பும் இருந்தன. இதன் பிறகு காலன் ஸ்மிர்னாவுக்கும் அலெக்சாந்திரியாவுக்கும் போய்க் *(Smyrna & Alexandria)* கல்வி பயின்றார். இங்கு உடற்கூறு, அறுவை சிகிச்சை முறை பற்றிப் பயிற்றுவிக்கும் கல்விக் கூடங்கள் இருந்தன. இருபத்தி எட்டாவது வயதில் பெர்காமமுக்குத் திரும்பிய போதே கேலன் புகழ்பெற்ற மருத்துவராக விளங்கினார். இவரிடம் சிகிச்சை பெறக் காத்திருந்தார்கள் நோயாளிகள். ரோம சாம்ராஜ்யத்தில் கிளாடியேட்டர்

களுக்கு ஸர்ஜனாக நியமிக்கப்பட்டார். இளம் வயதினரான கேலனுக்கு இது போதுமானதாக இல்லை. பெர்காமம் ரோம சாம்ராஜ்யத்தில் ஒரு சிறு மாகாணம் தானே? கேலனின் எண்ணமெல்லாம் உலகின் மிகப் பிரபலமான நகரமும் சாம்ராஜ்யத்தின் தலை நகரமான ரோமாபுரியின் மீதே இருந்தது. 161ல் ரோம் நகருக்குப் போய் நான்காண்டுகள் தங்கியிருந்து மருத்துவத் தொழில் புரிந்தார். பிறகு 169ல் மறுபடியும் ரோமாபுரிக்குச் சென்ற கேலன் தம்முடைய இறுதிக் காலம் வரை அந்தத் தலைநகரிலேயே வாழ்ந்தார்.

கேலன் ரோம் நகரில் தங்கியிருந்த காலத்தில் மருத்துவத் தொழில் புரிவதற்குச் சட்டதிட்டங்களோ கட்டுப்பாடோ எதுவும் கிடையாது. யார் யாரோ எதை எதையோ மருந்து என்று கொடுத்துத் தவறான முறைகளில் சிகிச்சைகளைக் கூறிப் பட்டமும் பதவியும் பணமும் பண்ணிக் கொண்டிருந்தார்கள். இதைக் கண்டு மனம் நொந்த கேலன் தம்முடைய குறிப்புக்களில் கடுமையாக இதைப் பற்றி எழுதியிருக்கிறார்.

'' செருப்புத் தைப்பவர், சாயம் தோய்ப்பவர், மர வேலை செய்வோர், உலோகங்களில் வேலை செய்வோரெல்லாம் தங்களது தொழிலைப் புறக்கணித்து விட்டு மருத்துவத் தொழில் புரியத் தொடங்கிவிட்டார்கள். ஓவியர்களுக்கு வர்ணம் குழைத்துக் கொடுப்போரும், வாசனைத் திரவியங்களைத் தயாரிப்பவர்களுக்கு மருந்துக்களைக் கலந்து கூட்டிக் கொடுப்போரும் தாங்கள் விஞ்ஞானிகள் என்று உரிமை கொண்டாடுகிறார்கள்.''

விரைவிலேயே கேலனின் புகழ் ரோமாபுரியில் பரவலாயிற்று. பொது மன்றங்களில் மருத்துவம் பற்றிச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அவர் காலத்தில் பிரபலமாக விளங்கியவர்களின் நெருங்கிய நண்பராகக் கருதப்



பட்டார். வேறு மருத்துவர்களால் தவருக முடிவெடுக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுக் குணமாகாத மன்னரின் நோயைக் கேலன் குணப்படுத்தியதினால், ரோம சாம்ராஜ்யாதிபதியான மார்க்க அரேலியரின் அபிமானத்துக்கு உகந்தவராகவும் ஆனார்.

இவர் காலத்தில் மனித உடலை அறுத்து ஆராய்ச்சி செய்வது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது. மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு மிருகங்களின் உடல்களையே பயன்படுத்தி வந்தனர். ஆனால் கேலன் காயம் அடைந்த கிளாடியேட்டர்களுக்குச் சிகிச்சை அளித்ததின் மூலம் மனித உடலின் உடற்கூறுகளையும் அமைப்பையும் பற்றிய மருத்துவத் துறைக்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துக் கொண்டார். இவர் ஆராய்ச்சி செய்த பல்வேறு துறைகளில் ஒன்று மூளையில் படும் காயங்களைப் பற்றியது. மோட்டார், சென்ஸரி நரம்புகளையும் *(Motor & Sensory Nerves)* அதன் செயல் முறைகளையும் பற்றி அறிந்து கூறிய முதல் மருத்துவர் கேலன்தான். உடலின் ரத்த ஓட்டத்தைப் பற்றியும் தமனிகளில் எப்போதும் ரத்தம் இருந்து கொண்டிருக்கும் என்பதையும் முதன் முதலில் கூறியவர் க்ளாடியஸ் கேலன்தான்.

இவர் கணிப்புக்களில் சில தவறுகளும் இல்லாமல் இல்லை. இதயத்தின் கீழ் அறைகளான வெண்ட்ரிக்கிள்களில் இடது, வலது பகுதிகள் தங்களுக்கிடையே ஒருவிதத் தொடர்பு கொண்டிருந்ததாக நம்பினார். இது தவறு என்பது இன்றைய சித்தாந்தம். ஆனாலும் கி. பி. 169 லிருந்து 180க்குள் இவர் மருத்துவம் பற்றி எழுதிய நூல் மருத்துவக் கலைக்கு அடிப்படையாகக் கருதப்படுகிறது. பின் வந்தவர்கள் கேலனை மருத்துவத்தின் தேவதை என்று புகழ்ந்தார்கள்.

கிரேக்க தத்துவ ஞானியும் புகழ் பெற்ற மருத்துவருமான ஹிப்போகிரேட்ஸின் போதனைகளைப் பின்பற்றினார் கேலன். மனித உடலின் உயிர்ச் சத்தில் அடங்கி இருப்பவை நான்கு பொருள்கள். அவை ரத்தம், கபம், பித்தம், கணையம் என்றார் ஹிப்போகிரேட்ஸ். இதை அப்படியே ஏற்றுக் கொண்டார் கேலன். இந்த நான்கும் ஒரு மனித உடலில் சரியான அளவில் இருக்குமானால் அவன் சந்துஷ்டியாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பான். இந்த நான்கு பொருள்களில் ஒன்று அதிகமானாலும் நோய்வாய்ப்படுவான் என்பது ஹிப்போகிரேட்ஸின் முடிவு. வியாதிகளின் காரணத்தை இந்த நான்கு பொருள்களின் இணக்கமின்மையை மட்டுமே காரணமாகக் கொண்டு வியாதிகளைக் கணிக்கவில்லை கேலன். வியாதிகளுக்கான சிகிச்சை முறைகளை விஞ்ஞான ரீதியில் அணுகினார்.

அவர் முறைகள் அவர் காலத்தில் 'புதுமை' *(Modern)* என்று அழைக்கப்பட்டன. ஆராய்ச்சிகள் உண்மையின் அஸ்திவாரத்தோடு இருந்தன. இவருடைய மருத்துவக் கலை என்ற நூல் பதினாறும் நூற்றாண்டின் முடிவு வரை மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு அடிப்படை நூலாக விளங்கியது. மிகச் சிறந்த மருத்துவர் என்ற பெருமையையும் புகழையும் பெற்ற க்ளாடியஸ் கேலன் கி. பி. 201ல் மறைந்தார்.

முதல் பக்கத்துப் புதிர்களின் விடைகள்:

1. இந்திய மன்னர்கள்.

2. பிரிட்டிஷ் கடற்கரையோரங்களில் காணப்படுகின்றன. (Angler Fish) - தூண்டில் மீன் என்று பெயர்.


3. இது எந்தப் போர் முனைப் படமுமல்ல. ஒரு பிரிட்டிஷ் கம்பெனி தயாரித்துள்ள பொம்மை டாங்கிகள் இவை. குழந்தைகளுக்கு அறிவு வளர இத்தகைய தத்ரூபமான பொம்மைகள் உதவுவது போல் வேறு எதுவுமே உதவி செய்யாது. இந்த டாங்குகள் இயங்கும் முறையும் நிஜ டாங்குகளைப் போலவே இருக்கும். (படமும் தகவலும்: பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனம்.)


4. சாக்ரமண்.


விடையைப் பார்க்கத் தடை!
(29ம் பக்கத்தில் புதிரை முதலில் பாருங்கள்)

1. முன்போலவே ஏணி இருக்கும். ஏனெனில் கடல் நீரின் மட்டம் உயர உயர, படகும் உயர்ந்துகொண்டே வரும். 2. ஒன்றுமிருக்காது. 3. ஒரு பெரிய வைக்கோற்குவியல் இருக்கும். 4. $99 + \frac{99}{99} = 100$ அல்லது $\frac{999 - 99}{9}$ 5. அந்த டாக்டர் வக்கீலுடைய சகோதரி. 6. அந்தக் கல் சரமாகும். 7. ஐந்து பைசா நாணயம். (15°C உஷ்ண நிலையில் உள்ள நீர் பனிக்கட்டியாக இருக்கும்). 8. ஒரே ஒரு கோடு. 9. அப்பொழுது மழை பெய்யவில்லை. 10. $\frac{100\,(100+1)}{2} = 5050$.

11. $123 - 45 - 67 + 89 = 100$. 12. ஆண் (His Master's Voice). 13. ஒரு தாத்தா, அவரது இரண்டு மகன்கள், அவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு பிள்ளைகள் ஆக ஏழு பேர்கள்.


அலமு! கமலு! சீதாராம்! நான் ஊரிலிருந்து வந்திருக்கேன்!
என்ன வீட்டில் சத்தமே காணோம். எல்லோரும் ஒளிந்து கொண்டு விட்டார்களா என்ன?
வெறுங்கையோடு வரல்லே. ஒரு அண்டா ஜலம் கொண்டு வந்திருக்கேனாக்கும்!
வரணும் வரணும்
வாங்கோ!
"அவன் தான் இந்த ஊரில் எல்லோருடைய காலையும் வாரி விடறவன்."
"அவனை முதலில் தலையை வாரிக்கச் சொல்லுங்கோ!"
"அப்பாவுக்குத் தாகம் தாங்கல்லையாம். கிணற்றிலே இருக்கிற ஒரே தம்ளர் ஜலத்தைக் குடிக்கப் போயிண்டிருக்கார்!"
சிரிக்கச் சிரிக்க....
சாமா
இதுகள் இரண்டும் வாசல் புழுதியில் விளையாடுகின்றன. உள்ளே விளையாடும்படி ஏதேனும் செய்யுங்கோ.
???





ஆண்DOLL கதை

காலட்சேபம் செய்பவர் கதை சொல்கிறார். பக்கத்தில் இருப்பவரிடம் பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு மனத்திரையில் அவர் விவரிக்கிற காட்சிகளை ஓட்டிப் பாருங்கள். ஒரு திரைப்படக் காட்சியை விடத் தத்ரூபமாயிருக்கும். அப்படி ஆண்டாளின் கதையைக் கேட்டார் ஒரு பெண்மணி. அவர் தம் மனக்கண்ணில் கண்ட காட்சிகளையெல்லாம் மற்றவரும் கண்டு மகிழ எண்ணம் கொண்டார். அப்படி உருவானதுதான் இந்தப் பொம்மைக் காட்சி. கழிந்து போன மார்கழி மாதத்தில் சென்னை ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி சபையில் பலரும் பார்த்து









மகிழும்வண்ணம் வண்ணக் கண்காட்சி வைத்திருந்தார் ஸ்ரீமதி நிர்மலா சுந்தரராஜன். (36/4, ஹாரிங்டன் சாலை, சென்னை - 30) பொல்லாத கோடையில் பொழுது போகாமல் தவிக்கும் நீங்களும் இப்படி ஏதாவது உருப்படியாகச் செய்ய முயலுங்களேன். உங்களுக்குப் பொழுது போதாமல் போனாலும் போகும்.










நந்து சுந்து மந்து ④

கதை: வாண்டு மாமா
சித்திரம்: செல்லம்




மங்குவினால் ஏற்பட்ட களேபரம் நங்கு சுங்குவை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்குகின்றது.
எனக்கேற் பட்ட நஷ்டத்தை நீங்கள் தான் தர வேணும்.
இந்தப் பயலாலே பெருந் தொல்லையாப் போச்சே. இங்கிருந்து சீக்கிரம் ஓடிடுவோம்.
ஒரு வழியாக ஹோட்டலுக்கு வந்தவர்கள், மங்குவுக்குத் தண்டனையாகத் தங்களோடு அதை உணவருந்த அழைத்துப் போக வில்லை. ஆனால் என்ன? மங்குவுக்குத் தெரியாதா சமையலறை!
என்னைப் பட்டினிபோட முடியுமா?
மங்குவைத் தேடி, தொடர்ந்து வருகிறது அந்த நாய்.
இந்தச் சனியன் இங்கேயும் வந்துட்டதே? சீச்சீ...போ... போ...
நாயை விரட்ட மங்கு ஒரு பெரிய மாமிசத் துண்டை அதன் மீது வீசுகிறது. அப்போது சமையற்காரர் அங்கு வர, நாய் தான் உணவைத் திருடித் தின்ன வந்திருப்பதாக எண்ணி விடுகிறார்.
இதென்னடாது கஷ்ட காலம், சமையல் காரர் வேறே வராரே...
நிலைமை திசை மாறிப் போனதை அறிந்த மங்குவின் பாடு கொண்டாட்டம்தான்.
ஆகா, அந்த நாய்க்குச் சரியான பூசை கிடைக்கும். எத்தனை விதமான பழங்கள். தேன் வேறே. அடடா என்ன ருசி!
நகர முடியாமல் வயிறு முட்டத் தின்று மயங்கிக் கிடந்த மங்குவைச் சுங்குவும் நங்குவும் பார்க்கின்றனர்.
இனி இந்த ஊரிலே இருக்கக் கூடாது.
டேய் மங்கு, மூச்சு விட முடியறதா இல்லையா? சரியான வேட்டை உனக்கு.
அந்த நாய் பாவம் செய்தியா உதை வாங்கிண்டு என்னைப் பாத்து ஓடிட்டது. என்னாலே சிரிக்கக் கூட முடியல்லே... அப்பாடி... வயிறு ...புஸ்!

தொடரும்



விமான நிலையத்தின் கதை

அவிநாசி முருகேசன்

நீங்கள் விமான நிலையங்களைப் பார்த்திருக்கலாம். வானத்தில் அவை பறக்கும்போது மிகப் பெரிய ஓசையுடன் செல்லும். நீங்கள் வீட்டினுள் இருந்தாலும் வெகு ஆவலுடன் வெளியே ஓடிவந்து வேடிக்கை பார்ப்பதுண்டு இல்லையா?

ஆகாய விமானத்தின் வரலாறு பற்றி பள்ளிகளில் பெரும்பாலானவர் படித்திருப்பீர்கள். 'ரைட் சகோதரர்கள்' என்று கேள்விப்படாதவர்களும் இருக்க முடியாது. முதன் முதலாக அவர்கள் தான் விமானத்தைக் கண்டவர்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

அது சரி, இந்த ஆகாய விமானங்கள் வந்து இறங்கிச் செல்ல ஓர் இடம் வேண்டுமே, அதற்குத்தான் விமான நிலையம் (Airport) என்று பெயர். பஸ் நிற்பதற்கு பஸ் ஸ்டாண்டு போலவும் ரயில் வந்து நிற்பதற்கு ரயில்வே ஸ்டேஷன் போன்றும், கப்பல்கள் வந்து தங்கிச் செல்வதற்குத் துறைமுகம் போலவும் விமானப் போக்கு வரத்துக்கென தனியாகப் பல இடங்கள் உண்டு.

விமான நிலையம் அமையும் இடத்தை அப்பகுதியில் ஏற்படக்கூடிய விமானப் போக்கு வரத்தின் அளவு, அப்பாதையில் வரும் விமானங்களின் வகைகளைப் பொறுத்தே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இரண்டு எஞ்சின் உள்ள டகோட்டா, (Dakota) நான்கு எஞ்சின் உள்ள தான ஸ்கை மாஸ்டர், (Skymaster) கான்ஸ்ட்டலேஷன் (Constellation) வகை விமானங்கள் பயன்படுத்தும் வகையில் அமைந்திருந்தது சென்னை விமான நிலையம். மேஜர் விமான நிலையமாக இருந்த சென்னை விமான நிலையம் சமீப காலமாக சர்வதேச விமான நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களில் உள்ளவையும் மிகப் பெரிய சர்வதேச விமான நிலையங்கள் ஆகும். இவை International Airports என்று அழைக்கப்படுகின்றன. இவை தவிர மேஜர், மைனர் விமானங்களும் போர்க் காலத்தில் ராணுவத்தினருக்குப் பயன்படும் வகையில் பல இடங்களில் ஏர் ஸ்டிப்புகளும் நம் நாட்டில் இருக்கின்றன.

மேற்சொன்ன டகோட்டா முதலிய விமானங்கள் இப்போது கிடையாது. நமது நாட்டைப் பொறுத்தவரை இந்தியன் ஏர்லைன்ஸ் கம்பெனியும் ஏர் இந்தியா கம்பெனியும் மட்டுமே விமான ஸர்வீஸ்களை இயக்குகின்றன. இவை இப்போது ஃபாக்கர்ஃபிரண்ஷிப், ஆவ்ரோ வைகௌண்ட், காரவீல் போன்ற 707, 737, 747 ஆகிய வகை விமானங்களைப் பயன்படுத்துகின்றன. கூடிய விரைவில் ஏர்பஸ் எனப்படும் ஒருவகை விமானங்களும் இயங்கப் போகின்றன. Fokker, Avro விமானங்களில் 44 பிரயாணிகளும் மற்றவற்றில் முறையே 48, 89, 144, 125, 350 பயணிகளும் செல்லலாம்.

ஒரு விமான நிலையத்துக்குச் சுமார் ஒன்றரை சதுர மைல் பரப்புள்ள திறந்த வெளி முதலில் அவசியம். இந்த இடம்


சம தளமாகவும் தட்டையாகவும் மரம், குன்று போன்ற தடை எதுவும் இல்லாமல் இருப்பதும் அவசியம். நகரை விட்டு ஐந்து அல்லது பத்து மைல் தொலைவில் தான் இத்தகைய பிரதேசங்களைத் தெரிந்தெடுக்கின்றனர். அவ்வெளியில் உள்ள காற்று வீசும் திசையை முக்கியமாகக் கருத்தில் கொண்டுதான் விமான நிலையக் கட்டிடத்தை அமைக்க வேண்டும். ஏனென்றால், எந்த விமானமும் காற்றை எதிர்த்தே கிளம்பவும் இறங்கவும் வேண்டியுள்ளது. காற்றை எதிர்த்து விமானம் கிளம்பக் காரணம், அந்தக் காற்றே விமானத்துக்கு ஒரு பிரேக் போலப் பயன்படுகிறது.

காற்று வீசும் திசை, மற்றும் வானிலை விவரங்களை வானிலை ஆராய்ச்சி நிலையத்தார் (*Meteorological office*) அறிந்து கூறுவர். விமான நிலையத்தின் விமான ஓட்டப் பாதையை (*Runway*) காற்றின் திசையிலேயே அமைக்கவேண்டும். ஐந்துடன் வரை ஏற்றவும் இறக்கவும் கூடிய பெரிய விமானங்கள் இறங்கவும் கிளம்பவும் ஏற்ற வகையில் கான்கிரீட் சாலையை அகலமாகவும் நீளமாகவும் உறுதியாகவும் அமைப்பர். இதைத்தான் ரன்வே—*Runway* என்கின்றனர்.

விமான நிலையத்தின் முக்கியத்துவத்தைப் பொருத்தும், விமானங்களின் போக்கு வரத்துக்களைப் பொருத்தும் ஒன்றுக்கு மேற்பட்ட ரன்வேக்களை அமைத்திருப்பர்.

விமான நிலையத்தில் உள்ள விமானப் பாதையில் இறங்கும் விமானம் தரையில் இறங்கிப் பிரயாணிகள் தங்கியுள்ள இடத்துக்கு அருகில் வந்து நிற்க ஏற்ற வகையில் இடை விடாத கான்கிரீட் தளம் போடப்பட்டிருக்கும். இந்தக் கான்கிரீட் இணைப்புப் பாதையை (*Taxi Way*) என்பர். விமானங்கள் நிற்கும் தளங்களுக்கு (*Apron*) என்று பெயர். பெரிய விமான நிலையங்களில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விமானங்கள் வரும். ஆதலால் அவை நிற்குமிடங்களை *Bay-1*, *Bay-2* என்று பகுத்துக் குறிப்பிடுவார்கள்.

விமானம் ஓட்டும் பைலட் (*Pilot*) இரவில் கூட விமானப் பாதையைக் கண்டுகொள்ள ரன்வேயின் இரு புறங்களிலும் ஐம்பது கெஜ இடைவெளி விட்டு மின்சார விளக்குகள் (*Standard*) அமைக்கப்பட்டிருக்கும். ரன்வேக்களின் இரு புறங்களிலும் மஞ்சள் விளக்குகளும்



Taxi Wayக்கு இரு புறங்களிலும் நீல விளக்குகளும் இருக்கும். விமானம் இறங்க வேண்டிய பாதையின் ஆரம்பத்தில் பச்சை நிற விளக்கும், முடிவில் சிவப்பு நிற விளக்கும் இருக்கும். உயரப் போகும்போது தொடக்கத்தில் பச்சையும் முடிவில் சிகப்பும் தெரியும்.

விமான நிலையத்துக்கு அருகில் உள்ள கட்டடங்கள் மீதும், உயரமான குன்றுகள் மீதும் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்,

கப்பலுக்கு லேட் ஹவுஸ் போலவே, விமான நிலையங்களுக்கு நீண்ட தூரம் ஒளி வீசும் விளக்கு (Beacon light) ஒன்று உண்டு. இவ்விளக்கு சுழன்று சுழன்று ஒளி வீசும் வகையில் மிக உயரமான இடத்தில் இருக்கும். விமானம் வானத்தில் செல்லும் வழிக்கு ஏர்வே (Airway) என்று பெயர்.

விமான இயக்கத்துக்குக் காற்று மிக அவசியமாதலால் ஒவ்வொரு விமான நிலையத்திலும் காற்றின் திசையை வண்ண விளக்குகள் மூலம் அறிவிப்பார்கள். இவை பெரிய அளவில் 'T' வடிவில் அமைக்கப் பட்டிருக்கும்.

ஒரு விமானம், நிலையத்திலிருந்து கிளம்பி, மற்றொரு நிலையத்தில் இறங்கும்வரையில் அந்த விமானியோடு கம்பியில்லாத் தந்தி மூலம் நிலையத் தொடர்புகள் இருந்து வரும். ஒவ்வொரு விமான நிலையத்திலும் கால நிலைகளை அறிவிக்க வேண்டிய வானிலை ஆராய்ச்சி நிலையங்களும் இருக்கும்.

எல்லா விமான நிலையத்திலும் மண்டலக் கண்காணிப்புப் பகுதி (Area Control Organisation) என்ற ஓர் அமைப்பு இருக்கும். இதில் பெரிய அளவில் நாட்டின் வரை படம் (Map) இருக்கும். விமானங்கள் செல்லும் பாதை, நாடு, இடம், விமான நிலையங்கள் ஆகியவற்றைத் தெளிவாக இதன் மூலம் அறியலாம். ஒரு விமானம் நிலையத்துக்குள் புகுந்ததும் அதன் பெட்ரோல் இருப்பு, எந்த நாட்டு விமானம், பிரயாணிகளின் எண்ணிக்கை போன்ற முழு விவரங்களையும் இந்தக் கண்காணிப்புப் பகுதிக்குத் தெரிவிக்க வேண்டும். விமானத்தின் போக்குவரவுகளைக் கண்காணிக்கும் முழுப் பொறுப்பும் இந்த மண்டலக் கண்காணிப்புப் பகுதியின் வேலையாகும்.

ஒரு விமானம், விமான நிலையத்துக்குப் பத்து அல்லது பதினைந்து மைல் தொலைவுக்குள் வந்தவுடன், அவ் விமானம் எத்தனை அடி உயரத்தில் பறந்து வர வேண்டும், தரையில் இறங்க எந்த விமானப் பாதையைப் பயன்படுத்த வேண்டும் என்பன போன்ற செய்திகளை ரேடியோ, டெலிபோன் மூலம் விமானிக்கு அறிவிப்பது Flying Control பகுதியின் வேலையாகும்.

விமான நிலையத்தை அழகுணர்ச்சியுடன் நல்ல நிலையில் வைத்திருப்பதற்கெனப் புல்வெட்டும் யந்திரங்கள், உருளைகள், டிராக்டர்கள் முதலியனவும் உண்டு. விமான நிலைய அலுவலகத்தைச் சுற்றியும், பிரயாணிகள் தங்கவும் நடக்கவும் ஏற்ற வகையில் சிமெண்ட் பூசிய தளமும், பெரிய மைதானமும் இருக்கும்.

விமானத்தின் பழுதுகளை சரி பார்ப்பதற்கு ஒரு சின்ன வாகன சாலை அங்கு (Garage) இருக்கும்.

விமானம் பறப்பதைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தும் கோபுரம் (Control Tower) பறத்தல் கண்காணிப்புப் பகுதி (Flying Control) மண்டலக் கண்காணிப்புப் பகுதி (Area Control) விமான நிலையங்களின் ஆணையர் (Controler of Aerodromes) அலுவலகம், செய்தித் துறை (Communications) ஆகிய யாவும் விமான நிலைய அலுவலக கட்டடத்தின் மேல் தளத்தில் இருக்கும்.

கட்டடத்தின் கீழே விமானிகள் தங்கும் இடம், வரவேற்பு அறை, சிற்றுண்டிச் சாலை, தபால், தந்தி அலுவலகங்கள், டெலிபோன், புத்தகக்கடை முதலியன இருக்கும். வெளி நாட்டுப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மத்திய அரசினர் சுற்றுலா இலாகா தகவல் நிலையமும் இங்கு இருக்கும்.

சாந்தாகுரூஸ் (பம்பாய்), டம்டம் (கல்கத்தா), பாலம் (டெல்லி), மீனம்பாக்கம் (சென்னை) ஆகிய நான்கும் சர்வதேச விமான நிலையங்கள். இந்த நான்கு விமான தளங்களின் நிர்வாகப் பொறுப்பும், பாதுகாப்புப் பொறுப்பும் International Air port Authority என்ற நிறுவனத்தைச் சேர்ந்தது. இவர்களே இவற்றின் உரிமையாளர்களாவர். இந்த நான்கு நிலையங்களின் உள்ளே செல்ல ரூபாய் ஒன்று பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும். வாகனங்களுக்கு ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் தனியாகச் செலுத்த வேண்டும். மற்ற நிலையங்கள் மத்திய அரசின் சிவில் ஏவியேஷன் (Civil Aviation) இலாகா பொறுப்பில் உள்ளன.

தரை விமான நிலையங்கள் போலவே, கடல் விமான நிலையங்களும் (Seaplane base or Seadromes) உள்ளன. ஆனால் இவை நம் நாட்டில் இல்லை.

டைமட்ரோடன் - விசிறி முதுகுப் பல்லிகள்

கிருஷ்ணவேணி


ராட்சதத் தவளையான எரியாப்ஸ்கள் உணவு தேடியும் ஓடவேண்டி இருக்கவில்லை. கிளிஞ்சல் மீன், நீர்த். தாவரம் ஆகியவை இவை இருக்கும் இடமான நீர் நிலைகளின் அருகே ஏராளமாக ஒதுங்கின. ஆகவே அவைகளை அப்படியே கபளீகரம் செய்யலாம். எரியாப்ஸ்களுக்கு ஏராளமான பற்கள் இருந்தன. ஆகவே தன் இனத்துச் சிறிய ஆம்ஃபிபியன்களைப் பிடித்துக் கடித்துச் சுவைக்கவும் செய்தன.

எரியாப்ஸ்களுக்குப் பெரிய தலை இருந்தாலும் அவற்றின் தலைகளுக்குள் ஒன்றும் கிடையாது. அதாவது மூளை! வெயிலில் காய்ந்தபடி வாழ் நாளைக் கழித்து வந்த இவை பூமியில் நிகழும் மாற்றங்களைப் பற்றி எண்ணவே இல்லை. ஆனால் இந்த எரியாப்ஸ்கள் ஒரு விஷயத்தில் பெருமைப்பட்டுக் கொள்ளத் தகுதி வாய்ந்தவை. இதற்கு முன்பு வாழ்ந்த எந்தப் பிராணிகளும் ஒலி எழுப்பியதில்லை. உலகில் முதல் குரல் எழுப்பியவை இந்த எரியாப்ஸ்கள்தான். கரகரப்பான கட்டைக் குரலில் ஒலியெழுப்பின.

ஆம்ஃபிபியன்களில் சில வகை தொடர்ந்து ஜீவித்தாலும் எரியாப்ஸ்கள் அழிந்து மறைந்தன. பல்கிப் பெருகித் தொடர்ந்து வாழ உருவம் முக்கியமல்ல என்பதற்கு எரியாப்ஸ்களின் மறைவு உதாரணமாகிறது. இன்றைய ஆம்ஃபிபியன்கள். இதன் தோற்றத்தில் பாதி அளவு கூட இல்லை.

எரியாப்ஸ்களை அடுத்து முதுகெலும்போடு கூடிய புதிய ஜீவராசிகள் பூமியில் தோன்றலாயின.

பாலியோஸாய்க் *(Paliozoic Era)* சகாப்தத்தின் முடிவிலே — அதாவது 275 மிலியன் ஆண்டுகளுக்கு முன்னால் புதிய வகைப் பிராணிகள் உலகில் தோன்றலாயின. இவைகளுக்கு முதுகெலும்பு இருந்தது மட்டுமல்ல, நிலத்தில் ஊர்ந்தும் செல்லலாயின. இவற்றை ஆங்கிலத்தில் ரெப்டைல்ஸ் *(Reptiles)* என்கிறார்கள். நிலக்கரிக் காடுகளில் சரிந்து விழுந்து கிடந்த மரங்களிடையே இத்தகைய ஊர்ந்து செல்லும் பிராணிகள் பல்கிப் பெருகின. பார்வைக்கு ஆம்ஃபிபியன்களைப் போலிருந்தாலும் இவை வாழ்ந்த விதம் முற்றிலும் மாறுபட்டிருந்தது. குட்டையான தலை, கழுத்து, கால்கள், வாலோடு காணப்பட்டன. தங்கள் மூதாதையர்களான ஆம்ஃபிபியன்களைப் போல இவை நீரில் முட்டையிடவில்லை. ஈரமான பூமியில் குழி பறித்து அதில் முட்டைகளை இட்டன. ஆம்ஃபிபியன்களின் முட்டைகளைச் சுற்றிக் கொழ கொழப்பானதொரு வஸ்து சுற்றிக் கொண்டிருக்கும். ஆனால் ரெப்டைல்களின் முட்டைகளின் மேல்



கெட்டியான ஓடுகள் போர்த்தியிருந்தன. இந்த ஓடு இவை அழிந்து போகாமல் காப்பாற்ற உதவியது.

முட்டை பொரிந்து அதிலிருந்து வெளிப்பட்ட புதிய ஜீவன் தனது பெற்றோரைப் போலவே உருவ அமைப்புடன் காணப்பட்டன. முட்டையிலிருந்து வெளிவந்தவுடனேயே இவைகள் நிலத்தில் ஓடின. ஏனென்றால் இவற்றுக்குச் சுவாசிக்க நுரையீரலும் ஊர்ந்து செல்லக் கால்களும் இருந்ததுதான்.

ரெப்டைல்ஸ் என்னும் பிரிவைச் சேர்ந்த ஜீவராசிகளில் இன்று நீங்கள் காண்பவை எவை தெரியுமா? பல்லிகள் பாம்புகள், முதலைகள், ஆமைகள் உடும்புகள் - ஓணான்கள் முதலியவை. ஆனால் ஆதியில் தோன்றிய ஊர்வனவற்றில் ஒரு வகைக்கு முதுகில் விசிறி போன்ற ஓர் அமைப்பு இருந்தது. இதற்கு ஸெயில் பாக்டு ரெப்டைல் *(Sail Backed Reptiles)* என்று பெயர். இதை டைமெட்ரோடன் *(Dimetroden)* என்கிறார்கள், ஆராய்ச்சியாளர்கள். இரு மடங்கு நீளமுடைய பற்களோடு கூடிய *(Double Measured tooth)* என்பது இதன் பொருளாகும். விசிறி முதுகோடு கூடிய இப்பிராணி, அளவில் எரியாப்ஸ்களைப் போலவே இருந்தாலும் தோற்றத்தில் எரியாப்ஸ்களினின்று மாறுபட்டிருந்தது. இவற்றின் முதுகில் பழங்காலக் கலங்களின் பாய் மரங்களைப் போல ஒரு கெஜ உயரத்தில் ஓர் அமைப்பு துருத்திக் கொண்டு நின்றது. இந்தப் பிராணியின் முதுகெலும்பிலிருந்து மேல் நோக்கி வளர்ந்துள்ள எலும்புகளை உறுதியானதோல் போர்த்தி இருந்தது. இவை மீனின் துடுப்புக்கள் (சிறகுகள்) போன்றிருந்ததனால் இந்தப் பிராணிகளை மீன் துடுப்புப் பிராணி *(Fine Back)* என்றும் அழைத்தார்கள்.

இந்த விசிறி முதுகுப் பிராணியின் தலையும் கூட எரியாப்ஸ்களின் தலையிலிருந்து மாறுபட்டிருந்தன. இதன் தலை அகன்றோ, சம மட்டமாகவோ இருக்கவில்லை. இதற்கு ஏராளமான பற்கள் இருந்தன. வாயின் இரு பக்கங்களிலும் குத்து வாள் போன்ற கோரைப் பற்கள் இருந்தன. ஆகவே விசிறி முதுகுப் பிராணி ஒரு 'மாமிச பட்சணி என்பதில் சந்தேகமே கிடையாது. பூச்சிகளை விடப் பெரிய பிராணிகளை இது உணவாகத் தின்றது.

உணவாக உட்கொள்ளும் பிராணிகளைக் கடித்து வாயில் போட்டு அரைக்கும்போது இப்பிராணிகளின் பற்களில் சில உடைந்தாலும் உடைந்த பற்கள் விழுந்து அந்த இடத்தில் புதிய பற்கள் முளைத்தன. மாமிசம் உண்ணும் பிராணிகளுக்குப் பற்கள் குறையாமல் இருக்க வேண்டியது முக்கியமல்லவா?

முதுகில் இருந்த பாய்மரம் போன்ற அமைப்பினால் இப்பிராணிக்கு என்ன அனுகூலம் என்று தெரியவில்லை. ஆனால் மரங்களிடையே ஊர்ந்து திரியும்போது, இந்த விசிறி அமைப்பினால் இதற்கு அவஸ்தைதான் அதிகமிருந்திருக்கும். இந்தச் சகாப்தத்தில் வாழ்ந்தது இது மட்டுமல்ல. வேறு பலவகையான ஊர்ந்து செல்லும் பிராணிகளும் வசித்தன. இவற்றில் ஒன்று ஷிப் லிஸர்டு *(Ship lizard)* எனப்படும் கப்பல் பல்லி. இதன் முதுகிலிருந்த விநோத மீன் துடுப்புப் போன்ற அமைப்பினாலேயே இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

பூமியில் ஊர்வன தோன்றிய காலத்தில் மகத்தான மாற்றங்கள் ஏற்பட்டன. சில இடங்களில் மிக உயரமான மலைகள் பூமியின் மேல் பரப்பில் தோன்றலாயின. பூமியின் மேல் பரப்பிலே பல மடிப்புக்கள் ஏற்பட்டன. வேறு சில பகுதிகளில் கடற்கரைகள் உண்டாயின. கடல் பகுதிகளில் பல, நிலங்களாக மாறின. சதுப்பு நிலங்கள் மறைந்தன. பருவ நிலையிலும் பல மகத்தான மாறுதல்கள் ஏற்படலாயிற்று. பல இடங்களில் கடுமையான குளிராக இருந்தது. இப்படிப் பூமியில் தோன்றிய பெரிய மாற்றங்கள் அதில் வாழும் உயிரினங்களின் வாழ்வையும் மாற்றின.

ஊர்வனவற்றுக்கு — ரெப்டைல்ஸ்— நீரின் அருகிலே வாழவேண்டிய நிர்ப்பந்தம் இல்லையே. அவை தங்கள் முட்டைகளை நீரில் இடவேண்டியதில்லை. உணவு தேடி நிலப்பரப்பில் வெகு தூரம் அலைந்தன. இதனால் ஊர்வனவற்றின் இனங்களும் வகைகளும் உலகில் ஏராளமாகப் பல்கிப் பெருகின. பெர்மியன் என்றழைக்கப்படும் காலகட்டத்தில் உலகில் ஊர்வனவற்றின் ஆட்சியாகவே இருந்தது. இந்த 'ஏஜ் ஆஃப் ரெப்டைல்ஸ்' *(Age of Reptiles)* என்றே அழைக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.


விதைகளிலிருந்து பெருகும் தாவர இயல் வளர்ந்ததும் இந்த பெர்மியன் யுகத்தில்தான். கார்டைட் *(Cordaite)* என்பது ஒரு வகைத் தாவரம். வழுவழுப்பான அடி மரமும் நீண்ட இலைகளும் உடையது. இலைகளிடையே கொத்துக் கொத்தாக விதைகள் தோன்றின. இன்னொரு வகை பசேல் என்று மரம் முழுதும் இலைகள். கோபுரம் போன்ற அமைப்பு - இன்றைய ஃபிர், பைன், சைப்ரஸ் மரங்களைப் போல.

பெர்மியன் யுகத்தின் முடிவில் கடலில் வாழ்ந்த டிரைலோபைட்கள் முழுமையாக அழிந்தன. முந்நூறு மிலியன் ஆண்டுகளின் சரித்திரம் ஒரு முடிவுக்கு வந்தது. புராதன வாழ்வு என்ற பாலியோஸாய்க் சகாப்தமும் முடிவுற்றது. உலகத்தின் கதையில் அடுத்த அத்தியாயமான மெஸோஸாய்க் (**Mesozoic**) சகாப்தம் ஆரம்பமாயிற்று. இந்தச் சகாப்தம் 120 மிலியன் ஆண்டுகள். இதில், மூன்று காலகட்டங்கள் — டிரையாஸிக், ஜுராஸிக், கிரிடேஷஸ் (***Triassic, Jurassic, cretaceous periods***) என்று. ஊர்வன ஆட்சி புரிந்த யுகங்கள் இவை. ராட்சத மிருகங்களின் தோற்றம் இந்தக் கால கட்டங்களில்தான்.

'இந்தக் கட்டுரையில் வரும் பெயர்களெல்லாம் வாயில் நுழையாதபடியும், உச்சரிப்பில் பல்லுடையும்படியும் இருக்கின்றனவே, ஏன் இப்படி?' என்று கேட்கத் தோன்றுகிறதில்லையா? ஆனால், இதற்கு ஒரு காரணமும் இருக்கிறது.

விஞ்ஞானிகள் தாவரம், பிராணி இவற்றுக்குப் பெயரிடும்போது லத்தீன் கிரேக்க மொழிகளை இணைத்தே பெயரிடுகிறார்கள். அது அவற்றின் ஏதாவது ஒரு குணத்தைக் குறிப்பதாக இக்ருகும். எல்லா நாட்டிலும்; அவர்கள் மொழி எதுவானாலும் தாவர இயல், உயிரியல் ஆகியவற்றில் வரும் விஞ்ஞானப் பெயர்கள் ஒரே மாதிரியாக இருப்பதினால் உலகில் உள்ள விஞ்ஞானிகள் சுலபமாக இவற்றை இனம் கண்டு கொள்ள இத்தகைய பொதுப் பெயர்கள் உதவுகின்றன. இனி வரப்போகும் டினோஸார் எனப்படும் ராட்சத மிருகங்களுக்குத் தரப்பட்டுள்ள பெயர்களை எந்த நாட்டுக் குழந்தைகளும் புரிந்துகொள்வதற்காகப் பொதுவான விஞ்ஞானப்பெயர்களையே கொடுக்கிறார்கள். ப்ராண்டோஸரஸ் என்பது ஒரு டினோஸாரின் (ராட்சத மிருகம்) பெயர். இதற்கு இடியோசைப் பல்லி (***Thunder Lizard***) என்று பொருள். இப்படி ஒவ்வொரு பெயருக்கும் (லத்தீன் — கிரேக்க மொழிக் கலப்பான) ஒரு பொருள் உண்டு. ஹிப்போபடமஸ் என்றால் உங்களுக்குத் தெரியும். நதிக்குதிரை (*River Horse*) என்பது இதன் உண்மையான விளக்கம். இப்படியே ராட்சத மிருகங்களுக்கான பெயர்கள் 'கடபுடா' என்று ஒலித்தாலும் அவற்றுக்குப் பொருத்தமான பொருள் உண்டு என்பதை மறக்கவேண்டாம்.

இனி நாம் ராட்சத மிருகங்கள் வாழ்ந்த காலத்துக்குள் நுழைவோம்.



ஒன்றே செய்க, நன்றே செய்க!

''தோட்டக் கலையில்தான் எனக்கு மிகவும் ஈடுபாடு. புதிய புதிய பூச்செடிகளையும் பழ மரங்களையும் உற்பத்தி செய்வேன். தாவர இயலில் இதுவரை யாரும் கண்டிராத புதுமைகளைச் செய்யப் போகிறேன். அது என் மனத்துக்குப் பிடித்தமான வேலையும்கூட. எப்போதும் கம்மென்ற மணம் பரப்பும் செடிகளிடையே இருக்கலாமே'' என்றான் சேகர். அவனுக்குப் பதினைந்து வயது. சம்பாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவன் அப்பா பெரிய பணக்காரர். அவன் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்கமாட்டார்.

தோட்டக் கலையில் ஈடுபடச் சென்ற சேகர் கொஞ்ச நாளில் அலுப்போடு திரும்பி வந்தான். ''என்ன தோட்டக் கலை? எப்போதும் மண்ணைக் கொத்திக் கிளறிக் கொண்டிருக்க வேண்டி இருக்கிறது. உடம்பெல்லாம் ஒரே வலி. எனக்கு வேண்டாம் தோட்ட வேலை'' என்றான். கொஞ்ச நாட்கள் கழித்து, சும்மா இருக்க விரும்பாதவன் தன் தந்தையிடம், ''அப்பா, நான் கானகத்துக்குப் போய் வேட்டையாடப் போகிறேன். பசேல் என்ற கானகத்தில் உள்ள இன்பம் எதில் இருக்கும்? விதம் விதமான மிருகங்களையும் பறவைகளையும் காணலாம். கானக வாழ்வு களிப்புத்தான்'' என்ற மகனுக்குத் தந்தை பதில் ஏதும் கூறவில்லை. கொஞ்ச நாளில் ஆய்ந்து ஓய்ந்து அழுக்கடைந்த ஆடையுடன் திரும்பி வந்த சேகர், ''சே... சே! வேட்டையாடுவதும் ஒரு வேலையா? இரவெல்லாம் கடும் குளிர், பகலெல்லாம் தாங்க முடியாத வெயில். நல்ல படுக்கை 'உண்டா, உணவு உண்டா?'' என்று சலித்துக் கொண்டான்.

கொஞ்ச நாளில் மறுபடியும் வேலைக்குக் கிளம்பினான், சேகர். இப்போது அவன் மேற்கொண்டது, மீன் பிடித் தொழில். ''வெள்ளியாகத் தகதகக்கும் ஆற்று நீரிலே உல்லாசமாகத் தோணியிலே போய்க் கொண்டே இந்தக் காரியத்தைப் பார்க்கலாமே. நடை கிடையாது. அலைச்சல் இல்லை. ஆகவே அயர்வும் இல்லை. ஒரு தடவை வலை வீசி இழுத்தால் தோணி கொள்ளாத மீன். அத்தனையும் பொன்!'' என்று புகழ் பாடி உத்ஸாகமாகக் கிளம்பினான். தந்தை தமக்குத் தாமே சிரித்துக் கொண்டார். முன்னைவிடச் சீக்கிரமே திரும்பினான் சேகர். ''தண்ணீர்..... தண்ணீர்...... சே! ஒரே நைப்பு.... தண்ணீரைக் கண்டாலே வெறுப்பாய்ப் போச்சு'' என்றான். விரைவிலேயே வேறொரு வேலையையும் தேர்ந்தெடுத்து விட்டான். சமையல் வேலை! ''உழைப்பதெல்லாம் எதற்காக? ருசியாக உண்ப

தற்காகத்தானே? அந்த உணவைத் தயாரிக்கும் வேலையை நானே கற்றுக் கொண்டு விட்டால், பசிக்கும்போது பிறர் கையை எதிர்பார்க்க வேண்டாமே!'' பிடிவாதம் கொண்ட அவன் வாதம் நன்றாக இருந்தது. சாதம் சமைக்கக் கிளம்பி விட்டான் சேகர்! ஆனால் மறுபடியும் பழைய கதைதான். வினாவை விழிகளிலே தேக்கி விடையை எதிர்பார்த்தார் மகனிடம் தந்தை.

''சமையல் வேலை நல்லதுதான். ஆனால் அந்த அடுப்படி வெப்பத்தைத் தாங்க முடியவில்லை. கோட்டை அடுப்பின் அருகில் நிற்கும் போது எங்கே உருகிவிடுவோமோ என்றாகி விட்டது!'' வியர்வையை அழுத்தித் துடைத்துக் கொண்டே உட்கார்ந்தவன், 'வேறு ஏதாவது நல்ல வேலையாகச் செய்யவேண்டும். இது நமக்கு ஒத்துக் கொள்ளாது'' என்றான்.

இப்போது அவன் தந்தை பேசினார். ''ஐந்தாவது தொழிலைத் தேடி நீ போக வேண்டாம். வாழ்க்கையின் கஷ்டங்களை ஆண் மகனுக்கு ஏற்ற துணிவோடு தாங்கிக் கொள்ளப் பழகிக் கொண்டால் எந்த விதமான வாழ்க்கையும் இனிமையாக எளிதாகவே இருக்கும். இந்த உன் மனோபாவத்தில் எந்த வேலையுமே உனக்கு ஒத்து வராது. ஒரு வேலையில் உள்ள கஷ்டங்களை மட்டுமே பெரிதாக நினைத்தால் அதில் இருக்கும் இன்பங்கள் கண்ணுக்குத் தெரியாது. உழைப்பதற்குப் பின்வாங்குபவனும் கஷ்டங்களை எதிர் கொள்ளத் தயங்குபவனும் வாழ்க்கையில் முன்னேற முடியாது'' என்றார். அதன் பிறகு சேகர் மேற்கொண்ட வேலையிலிருந்து திரும்பவில்லை. இப்போது அவன் கண்களுக்குக் கஷ்டங்களே தென்படுவதில்லை. உழைப்பிலே உற்சாகம் காண ஆரம்பித்துவிட்ட அவன் வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டிருக்கிறான் என்று சொல்லவும் வேண்டுமா?

— அவிட்டம்

சிற்றுளியால் கல்லும் தகரும்

தத்துவ ஞானி ஒருவர் தமது மேதைமையைப் பற்றி மிகவும் இறுமாந்திருந்தார்.

ஒரு நாள் பக்கத்து வீட்டிலிருந்து, பத்து வயதுச் சிறுவன் ஒருவன் வந்து, ''எங்கள் வீட்டில் அடுப்பு மூட்டுவதற்காக, உங்கள் அடுப்பிலிருந்து இரண்டு மூன்று தீக் கங்குகள் வேண்டும்'' என்று அவரிடம் கேட்டான்.

''தம்பி! தீக்கங்குகளை எடுத்துப் போகப் பாத்திரம் எதுவும் கொண்டு வரவில்லையே! என்ன, கையிலா ஏந்திக் கொண்டு போவாய்?'' என்று கிண்டலாகக் கேட்டார் தத்துவ ஞானி.

''ஆம்!'' என்று பையன் சொன்னதும் அவன் அறியாமையைக் கண்டு தத்துவ ஞானி சிரித்தார். ஆனால் பையன் விடுபவனாகத் தெரியவில்லை.

''நீங்கள் தீக்கங்குகளை எடுத்துக் கொண்டு வாருங்கள்; நான் அவைகளைக் கையிலேயே எடுத்துக் கொண்டு போகிறேன்'' என்று அவன் மிகவும் அழுத்தமாகச் சொன்னான்.

தத்துவ ஞானி உள்ளே போய்த் தீக்கங்குகளை ஒரு பாத்திரத்தில் கொண்டு வந்தார்.

அவர் வருவதற்குள் பையன் அந்த வீட்டு முற்றத்தில் கிடந்த மண்ணைக் கை நிறைய வாரிக் கொண்டு, ''மண்ணின் மீது தீக்கங்குகளை வைத்து விடுங்கள்!'' என்று சொன்னதும் தம் ஆணவத்தை எண்ணித் தலை குனிந்தார் தத்துவ ஞானி.

ஆதாரம்: **பிறை**



மங்கோலியர்

கிட்டுவையும் பட்டுவையும் அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்கு நடந்தான் சுகேபே. கால் நடந்தாலும் வாய் சும்மா இருக்கவில்லை. கோபி பாலைவனத்தைப் பற்றி விவரிக்கலானான்.

''பாலைவனம் பொதுவாக எல்லாமே ஒன்றுதான் என்றாலும் எங்கள் கோபி பாலைவனத்தில் எத்தனையோ அற்புதமான காட்சிகளைக் காணலாம். எல்லையற்ற மணல் மேடுகளிடையே நீல நிறமான ஏரிகள் உண்டு. வண்ண வண்ணமாக ஜ்வலிக்கும் கூழாங்கற்களைக் காணலாம். சில பகுதிகளில் வீசும் காற்றினால் இனிமையான சங்கீத ஒலி உண்டாகும். இதை நாங்கள் பாடும் பாலைவனப் பகுதிகள் என்றழைப்போம். ஓயஸிஸ் எனப்படும் பகுதிகளில் கறுப்பான நீர் தேங்கி இருக்கும். உயிர் போகும் தாகத்திலிருந்து பிரயாணிகளைக் காப்பாற்றுவது இத்தகைய கறுப்பு நீர்க் குட்டைகள்தான்'' என்ற சுகே, 'எங்கள் தலைநகர் எது தெரியுமா?' என்று கேட்டவன் பதிலையும் தானே கூறித் தொடர்ந்து பேசினான். ''உலன்படார் என்ற நகரம்தான். ஜிர்கலாண்டா, ஜிப்ஹலாண்டா, சாய் பால்ஸன் ஆகியவை மற்ற பெரிய நகரங்கள். நாம் அருகிலுள்ள என் பாட்டி வசிக்கும் இடத்துக்குப் போவோம். கிழக்கு கோபியிலுள்ள ஒரு ஐமக்கில் (*Aimak*) இருக்கிறாள் என் பாட்டி'' என்றான் சுகே.

''ஐமக் என்றால்...?'' கேட்டது பட்டு.

''ஐமக் என்பது ஆரம்ப காலத்தில் ராணுவத்தினரால் வழங்கப்பட்டது. தன்னிறைவு பெற்றதொரு குடியிருப்பு என்று பொருள். மங்கோலியா பதினெட்டு ஐமக் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.''

''நம் ஊரில் ஜில்லாக்கள் இல்லையா அதுபோல இருக்கும்'' என்றார் தாத்தா.

''குடியிருப்புக்கள், கடைகள், காரியாலயங்கள், ஆஸ்பத்திரிகள் இத்தனையும் கொண்டதொரு 'காம்ப்' இந்த ஐமக்குகள்.''

''பள்ளிக்கூடங்கள் உண்டா உங்கள் நாட்டில்?'' என்றான் கிட்டு.

''எங்களில் பெரியவர்களில் ஒருசிலருக்கே எழுதப் படிக்கத் தெரியும். 1921 ஆம் ஆண்டுக்கு முன்னால் மங்கோலியா முழுமைக்கும் இரண்டே இரண்டு பள்ளிக்கூடங்களே இருந்தன. அதற்குமுன் எங்கள் நாட்டில் செய்திப் பத்திரிகை அச்சானதே கிடையாது. கால் நூற்றாண்டுகளாகத்தான் நவீனக் கல்வி அதுவும் இலவசமாக எல்லோருக்கும் கிடைத்து வருகிறது.''

''உங்கள் ஆகாரம் என்ன?'' என்று கேட்டாள் பட்டு.

''என் பாட்டி உங்களைக் கண்டால் பெரிய விருந்தே வைத்து விடுவாள். டாரக் (*Tarag*) என்றால் தெரியுமா? புளித்த பால். சுவையாக இருக்கும். காய்ந்த மாமிசம். அது பதமாக வேகப் பல மணி நேரங்களாகும். டின்களில் அடைக்கப்பட்ட மீனும் உண்டு. எனக்கு மீன்தான் பிடிக்கும். மாமிசத்தை நான் விரும்புவதில்லை. ஆனால் என் பாட்டிக்கு மூட நம்பிக்கைகள் அதிகம். மீன் சாப்பிட்டால் உடம்பில் செதில்களும் துடுப்புகளும் ஏற்பட்டு நான் ஜப்பான் கடலில் போய் வாழ வேண்டி வரும் என்று கூறுவாள்'' என்றான் சுகே.

''ஐமக்கில் உன் பாட்டி இருப்பது என்ன பெரிய வீடா?'' என்று கேட்டாள் பட்டு.



''வீடா...'' என்று சிரித்தான் சுகே. ''நீங்கள் நினைப்பது போல் எங்கள் நாட்டில் பெரிய பெரிய கட்டடங்களைக் காண முடியாது. மரத்தினாலான வீடுகள் தான் நிரந்தரமான குடியிருப்புக்கள். என் பாட்டிக்கு இப்படிப் பெரிய மர வீட்டில் ஒரு பகுதியை ஐமக்கில் ஒதுக்கியுள்ளார்கள். ஆனாலும் என் பாட்டி எங்கள் முன்னோர்கள் வாழ்ந்ததைப் போல யுர்ட்டில் (Yurt) வாழுவதைத் தான் விரும்புகிறாள். எங்கள் மூதாதையர்களான செங்கிஸ்கான், குப்லேகான் இவர்களெல்லாம் வீட்டிலா வாழ்ந்தார்கள்? யுர்ட்டுகளில்தானே?''


''அதென்னது யுர்ட்? அப்படின்னா என்ன?'' என்று கேட்டாள் பட்டு.

''மங்கோலியாவில் எங்கள் முன்னோர்கள் வாழ்வதற்கு ஏற்படுத்திக் கொண்ட கூடாரங்களுக்கு யுர்ட் என்று பெயர். வெளியிலிருந்து பார்த்தால் ஏதோ பெரிய பிரும்மாண்டமான மூட்டை போலிருக்கும். தோல், உறுதியான துணி இவைகளால் மூடப்பட்டு வட்ட வடிவமாக இருக்கும் இந்தக் கூடாரங்கள். இவைகளைச் சுலபமாகப் பிரித்து வேறோர் இடத்தில் அமைத்து விடலாம். நடமாடும் குடியிருப்புக்கள். உள்ளே கதகதப்பாகவும் வசதி மிக்கதாகவுமிருக்கும். பால் நிரம்பிய தோல்பைகளைக் கூடாரத்தின் உச்சியிலிருந்து தொங்கும் கயிற்றில் கட்டி வைத்திருப்பார்கள். கூடாரத்தின் உட்புறச் சுவர் ஓரமாக மரத்தினாலான படுக்கைகள், மேஜைகள், ஸ்டூல்கள் போடப்பட்டிருக்கும். பளீரென்ற வண்ணம் பூசி வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும்'' என்று அவன் பாட்டியின் வீட்டுப் பெருமையைக் கூறியபடியே எங்களைத் தன் பாட்டியின் யுர்டுக்குக் கூட்டி வந்து விட்டான்.

நம் கிராமங்களில் வயல் வெளிகளில் நெல்லைச் சேமித்து வைக்க வைக்கோலினால் வட்டவடிவமாகக் குதிர்போலச் செய்து வைத்திருப்பார்கள். இதற்குக் கோட்டை என்று பெயர். அந்த மாதிரி இருந்தது மங்கோலியர்களின் கூடாரமான யுர்ட். உள்ளே சுகேயின் பாட்டி சமைத்துக் கொண்டிருந்தாள். கூடாரத்தின் மையத்தில் அதன் உச்சியில் தொங்கிய சங்கிலியில் சமையல் பாத்திரம் தொங்கிக் கொண்டிருந்தது. அதன் கீழே தீ மூட்டி உணவைப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தாள் பாட்டி. முதுமையினால் கூனிக் குறுகி நல்ல பழுத்த பழமாக விளங்கினாள். பேரனையும் எங்களையும் கண்டதில் பாட்டிக்கு ரொம்ப மகிழ்ச்சி.

ஒரு வழியாக உணவை முடித்துக் கொண்டதும் எல்லாரும் கணப்பைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டார்கள். சுகேபோவின் தகப்பனார் டெலிபோன் காரியாலயத்தில் சூபர்வைசர். அவன் அப்பாவும் அம்மாவும் கட்டாயக் கல்வி அளிக்கும் நடமாடும் பள்ளிக்குத் தவறாமல் போய் வருகிறார்கள். நாகரிகமான நகர வாழ்க்கையை விரைவில் மேற்கொள்ளத் துடியாக இருக்கின்றனர் சுகேபோவின் பெற்றோர். சுகேபோவும் இந்த ஐமக்கிலிருந்து சீக்கிரமே விடுதலை பெற்றுக் கிளம்பத் தவிப்போடு இருக்கிறான். ''இப்போது நான் மிருக வைத்தியராவதற்கான பயிற்சி பெற்று வருகிறேன். மங்கோலியாவிலேயே மிகவும் கௌரவம் உள்ளதும் நல்ல சம்பாத்தியத்துக்கான வாய்ப்புடையதுமான தொழில் மிருக வைத்தியராக இருப்பதுதான். உழைப்பாளிகளில் அறுபத்து நான்கு சதவிகிதம் பேர் கால்நடைகளைப் பராமரிப்பவர்களாக இருக்கிறார்கள். சாய்பால்கான் என்னுமிடத்தில் மிருக வைத்தியக் கல்லூரி உள்ளது. நான் அங்கு போய்க் கல்வி பயின்று வர வேண்டும் என்பது என் கனவு'' என்றான் சுகே.

கிட்டு, பட்டு, பரமேசுவரத் தாத்தா இவர்களுக்குக் குளிர் தெரியாதிருக்க



நல்ல கம்பளிப் போர்வைகளைக் கொடுத்து உபசரித்தான் சுகேபோ. நல்ல அசதியாகையால் வசதிமிக்க யுர்ட்டில் குறட்டை விட்டுத் தூங்கினார்கள் மூவரும். காலையில் இவர்களுக்கு முன்னதாகவே சுகே எழுந்துவிட்டான். ''தலைநகருக்குப் போகப் போகிறேன், உங்களைக் கூட்டிக் கொண்டு'' என்றான்.

'' உலன் படாருக்கா ?''

''ஆமாம். அதன் பொருள் தெரியுமா? சிவப்புக் கதாநாயகன்'' *(Red Hero)* என்று பெயர். சுதந்திர நாடானாலும் ரஷ்யாவுடன் எங்களுக்குக் கொஞ்சம் தொடர்பு அதிகம். மங்கோலியர்களாகிய எங்கள் வாழ்க்கை முறையில் புரட்சிகரமான மாற்றங்கள் உண்டாகக் காரணமாக இருப்பவர்கள் ரஷ்யர்கள். நவீன நகரமாக உலன் படாரைப் புதுப்பித்துக் கொடுத்துள்ளார்கள். சைபீரியன் ரயில் பாதையுடன் எங்கள் தலைநகரை இணைத்துக் கொடுத்துள்ளார்கள்.''

''கிட்டத்தட்ட ரஷ்யர்களின் ஆதிக்கம்தான் என்று சொல்லு.''

''நல்லதைச் செய்பவர்களிடம் நன்றியோடு இருக்க வேண்டாமா ?''

'' உங்கள் தேசத்தில் கிராமங்கள் உண்டல்லவா ?''

'' இல்லாமல் என்ன? கிணறுகள் இருக்கும் இடத்துக்கு அருகே பல யுர்ட்டுகள் காணப்படும். இதுவே மங்கோலியக் கிராமம். மழை மிக மிகக் குறைவு. மூர்க்க குணம் படைத்த நாய்கள் திருடர்களையும் ஓநாய்களையும் விரட்டிக் கால்நடைகளைக் காப்பாற்றும். ஆடு, ஒட்டகம், குதிரைக் குட்டிகள், யாக் இவை பால், பாலடை, மாமிசம் இவைகளைக் கொடுத்து வருகின்றன.''

''யாக் என்பது என்ன ?'' என்று கேட்டாள் பட்டு.

''மங்கோலியாவில் மட்டுமே காணப்படும் காட்டெருமைகளுக்கு யாக் என்று பெயர். குதிரைப் பாலிலிருந்து அதைக் காடியாக்கி ஒரு வகை பானம் தயாரிப்பார்கள். கம்பளியும் தோலும் உடைகளுக்கும் கூடாரங்கள் அமைக்கவும் பயன்படுகிறது. உங்கள் நாட்டைப் போலவே மாட்டுச் சாணத்தைக் காய வைத்து எரிபொருளாகப் பயன்படுத்துவோம்.''

''தலைநகருக்கு எப்படிப் போவாய்?''

''ஏன், குதிரையில்தான். மங்கோலியர்களான எங்களுக்குக் குதிரைச் சவாரி எங்கள் ரத்தத்தோடு கலந்துவிட்ட ஒன்று. நாளெல்லாம் குதிரை மீது இருந்தே கழித்துவிடுவோம். அதன் மீது உட்கார்ந்துகூடப் போகமாட்டோம். காலை ஊன்றிக் கொள்ள இருக்கும் இடத்தில் காலூன்றி நின்றபடியே உடல் கனத்தை ஒரு காலிலிருந்து இன்னொரு காலுக்கு அடிக்கடி மாற்றிக் கொள்ளுவோம். எங்கள் நாட்டில் போக்குவரத்துக்குக் குதிரைகள்தாம். பண்டைக் கால வியாபார மார்க்கங்களில் இன்றைக்கும் இந்தக் குதிரைகளில்தான் வேகமாகப் போய் வருகிறோம். பாலைவனப் பொட்டல்களில் ஒட்டகமும் யாக் காளை மாட்டு வண்டிகளும் பயன்படுகின்றன. நல்ல சாலைகள் சில, சமீப காலத்தில்தான் போடப்பட்டுள்ளன.'' சுகேபோ பேசிக் கொண்டே பிரயாணத்துக்குத் தயாரானான்.

'' மாரிக் காலத்தில் ஆட்டுத் தோலால் ஆன அங்கியும், ரோமக் குல்லாயும் அணிவோம். மணமான பெண்கள் தலையில் வெள்ளி, விலை உயர்ந்த கற்களினால் ஆன நகைகளை அணிந்து கொள்ளுவார்கள். முடியலங்காரமும், ரொம்ப ஆடம்பரமாக இருக்கும். மேலங்கி, ஆடைகள் எல்லாம் பளிச்சென்ற வண்ணத்திலும் பூ வேலைப்பாடுகளுடையதாகவும் இருக்கும்'' என்றான் சுகேபோ.

''மங்கோலியாவில் ஒருவன் எத்தகைய பணக்காரன் என்பதை அவன் மனைவி அணிந்துள்ள ஆபரணங்களைக்கொண்டே சொல்லிவிடலாம்'' என்றார் சுகேபோவின் தந்தை.

சுகேபோவின் தந்தையிடம் தாத்தா கேட்டார். '' உங்கள் நாட்டுப் பொருளாதாரம் பற்றிச் சொல்லுங்க!''

'' விவசாயம், கால்நடைகள் வளர்ப்பு, அவைகளின் தீவனத்துக்கான புல் பயிரிடுதல், தோல் இவைதான் அதிகம். கோதுமை, உருளைக் கிழங்கு, ஓட்ஸ் ஆகியவற்றையும் பயிரிடுகிறோம். கம்பளி ஆடைகள் தயாரிக்கிறோம். இப்போது நிலக்கரியும் தோண்டி எடுக்க ஆரம்பித்திருக்கிறோம்'' என்றார் அவர்.

'' உங்கள் நாணயத்தின் பெயர் என்ன?'' என்று கேட்டான் கிட்டு.

''துக்ரிக் *(Tugrik)* என்று பெயர். தலைநகருக்கு வந்தால் தரமான சர்க்கஸ் பார்க்கலாம். அதில் ஒட்டக நடனம் ஒன்னாங் கிளாஸ்!'' என்றான் சுகே.

'' இன்னொரு முறை வருகிறோம். எங்களுக்கு ஆண்டு முடிவுப் பரீட்சைகள் அதற்குப் படிக்க வேண்டும்'' என்று விடைபெற்றனர் கிட்டுவும் பட்டுவும்.

தாத்தா மந்திர மெழுகைத் துடைத்தார். அடுத்த வினாடி கிட்டுவும் பட்டுவும் ''செங்கிஸ்கான் என்பவரின் தலைமையில் மங்கோலியர் மேற்கு ஆசியாவின் மீது படையெடுத்தனர்....'' என்று தங்கள் அறையில் உருப் போட்டுக் கொண்டிருந்தார்கள். —விகேயெம்

- மிகப் பெரிய மீன் பிடிக்கும் படகு ஒன்று துறை முகத்தில் நிற்கிறது. அதன் ஒரு புறம், கயிற்றால் ஆன ஏணி ஒன்று தொங்குகிறது. ஏணியின் படி ஒவ்வொன்றும் ஓர் அடி தூரம் இடைவெளி கொண்டது. கடலின் நீர் மட்டம் மணிக்கு எட்டு அங்குலம் உயருகிறது. ஆறு மணி நேரம் கழித்து, ஏணியின் எத்தனை படிகள் நீரில் மூழ்கியிருக்கும்.

- ஓர் அடி நீளம், ஓர் அடி அகலம், ஓா அடி ஆழமுள்ள குழியில் எவ்வளவு மண் இருக்கும்?

- ஒரு வயலில் ஒரு மூலையில் $6\,{}^{7}/_{15}$ வைக்கோற் குவியலும், மறு மூலையில் $3\,{}^{8}/_{15}$ வைக்கோற் குவியலும், இருக்கின்றன. அவைகளைச் சேர்த்தால் எத்தனை வைக்கோற் குவியல் இருக்கும்?

- ஆறு ஒன்பதுகளைக் கொண்டு உங்களால் நூறு ஆக்க முடியுமா ?

- திருநெல்வேலியில் உள்ள ஒரு டாக்டருக்கு தூத்துக்குடியில் ஒரு வக்கீல் சகோதரர் இருக்கிறார். ஆனால் அந்த வக்கீலுக்குத் திருநெல்வேலியில் சகோதரரே கிடையாது. அப்படியானால் அந்த டாக்டர் யார் ?

- கருங்கடலில் வெள்ளைக் கல்லை எறிந்தால், அந்தக் கல் என்னவாகும் ?

- என் கையில் இரண்டு வாளிகள் உள்ளன. ஒன்றில் 15 டிகிரி சென்டிகிரேட் உஷ்ண நிலையிலும், மற்றதில் 15 டிகிரி ஃபாரன்ஹீட் உஷ்ண நிலையிலும் தண்ணீர் உள்ளது. இதில் ஒரே சமயத்தில், முதல் வாளியில் ஐந்து பைசா நாணயத்தையும், இரண்டாவது வாளியில் பத்து பைசா நாணயத்தையும், போட்டால், எந்த வாளியில் போட்ட காசு அடிப்புறத்தை முதலில் போய்ச்சேரும் ?

- ஒரு கிராமபோன் இசைத் தட்டில் எத்தனை கோடுகள் உள்ளன.

- ஒரு குடையின் கீழ் இருவர்தான் நனையாமல் செல்ல முடியும். ஆனால் மூவர் நனையாமல் சென்றனர். எப்படி ?

- 1 + 2 + 3 + 4 ... + 100 வரையில் உள்ள மொத்த எண்களின் கூட்டுத் தொகையை ஒரு நிமிடத்தில் கூற முடியுமா ?

- 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்று எண்களை வரிசையாக எழுதி, அதில் பொருத்தமான இடத்தில் கூட்டல், கழித்தல் அடையாளங்களைப் புகுத்தி அதன் கூட்டுத் தொகை நூறு வரும்படி செய்ய முடியுமா ?

- எச்.எம்.வி. (HMV) இசைத் தட்டில் உள்ள நாய் ஆணா? பெண்ணா ?

- மூன்று தந்தையரும், அவர்கள் ஒவ்வொருவரின் இரண்டு மகன்களும் ஒரு ஹோட்டலுக்குச் சென்றனர். ஆனால் அங்கு ஏழு நாற்காலிகளே காலியாக இருந்தன. ஒவ்வொருவரும் ஆளுக்கொரு நாற்காலியில் அமர்ந்தனர்...எவ்வாறு ?

தொகுப்பு — **தம்பிதுரை**

(விடைகள் 12ம் பக்கம் பார்க்க)



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

இளமைப் பருவம்—பூவாய மலரும்
நாட்கள்—மலர்ந்து சிரித்து உங்கள்
மனத்தை அள்ளி வளரும்
பருவம்...இப் பருவத்தில்
அவனுக்குக் கட்டாயம்
தேவை—இன்க்ரிமின்.
பின்னர் பாருங்களேன்
அவன் வளர்ச்சியை!
பசித்துப் புசிப்பான்...
உண்ணும் உணவெல்லாம்
ஓங்கிய வளர்ச்சியாக
மாறும். நலம் தரும்
வைட்டமின்கள், இரும்புச்
சத்து, இவற்றோடு உங்கள்
மகனின் வளர்ச்சிக்கு
மிகமிக அத்தியாவசிய
மான அமினோ அமிலம்,
லைஸின் யாவும்
நிறைந்தது இன்க்ரிமின்.



இன்க்ரிமின்* டானிக் டிராப்ஸ்: 2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்: 14 வயது வரையில்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—
Lederle ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


175 ml.
Incremin syrup
VITAMINS B1, B6, B12
LYSINE
WITH IRON
TONIC APPETITE
STIMULANT
Incremin syrup



1772. அஃபிஸ் (Aphis) என்ற பூச்சிக்கு இன்னொரு பெயர் உண்டு. அது என்ன?

1773. நிலக்கரித் தாரிலிருந்து ஆராய்ச்சி மூலம் ஓர் அழகிய வர்ணத்தைக் கண்டு பிடித்தார் ஒருவர். அவர் பெயர் என்ன? கண்ட வர்ணம் என்ன?

1774. எல்லா நாடுகளுக்கும் பொதுவாகத் துன்பம் துடைக்கும் கழகம் ஒன்றை ஹென்றி டுனண்ட் என்பவர் தோற்றுவித்தார். இதன் பெயர் என்ன?

1775. தமிழ் நாட்டில் டால்மியாபுரம் ஸ்டேஷன் இருக்கும் கிராமத்தின் பெயர் என்ன?

1776. பாலியாரிக் (Balearic) தீவுகள் எந்தக் கடலில் உள்ளன?

1777. ஸ்பெயின் தேசத்திலிருந்து பிரான்ஸ் நாட்டைப் பிரிக்கும் மலைத் தொடரின் பெயர் என்ன?

1778. கர்லிங் (Curling) என்பது ஒரு தேசத்தின் மாரிக்கால விளையாட்டு. அது எந்தத் தேசம்?

1779. சென்னையில் V. H. S. ஆஸ்பத்திரி ரொம்பவும் பிரபலம். அதன் முழுப் பெயர் என்ன? எங்கு உள்ளது?

1780. கிறிஸ்துமஸ் தீவு என்ற பெயரில் இரு தீவுகள் வெவ்வேறு இடங்களில் உள்ளன. அந்தக் கடல்கள் யாவை?

1781. மாஜாங் (Mah Jongg) என்ற விளையாட்டு எந்த நாட்டிலிருந்து தோன்றியது?

1782. கோஸ்டாரீகாவின் எல்லையாக அமைந்திருக்கும் நாடுகள் எவை?

1783. ஸாமோயேட் (Samoyede) என்பது என்ன?

1784. வில்லியம் ஷேக்ஸ்பியரைச் சிலகாலம் வேறு ஒரு பெயரால்— அழைத்து வந்தனர். அந்தப் பெயர் தெரியுமா?

1785. இந்தப் பூச்சியின் பெயரால் ஒரு ஆங்கில விளையாட்டு புகழ் பெற்று விளங்கி வருகிறது. அதன் பெயர் என்ன?

1786. இரண்டிரண்டு பெண் குழந்தைகளாக அணிவகுத்துச் செல்லும் ஊர்வலத்துக்கு ஆங்கிலத்தில் ஒரு பெயர் உண்டு. அது என்ன?

1787. ரோமானிய வீரர்கள் எந்தப் பறவையின் சின்னத்தைத் தாங்கியபடி போர்களத்துக்குப் போவார்கள்?

1788. ஆர்க்டிக் கடலில் உள்ள ஜீரிஞ்க (Bjoernge) தீவுக்கு வேறொரு பெயர் உண்டு. அது என்ன?


1789. கௌதம புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்டது ஒரு மரத்தடியில் தியானத்திலிருந்த போது. அந்த மரத்தின் பெயர் என்ன?

1790. ஸர் வால்டர் ராலே என்பவர் 1585-ல் ஒரு தாவரத்தை இங்கிலாந்துக்குக் கொண்டு வந்தார். அது தான் இன்று ஆங்கிலேயர்களின் முக்கிய உணவு வகைகளில் ஒன்றாக விளங்குகிறது. அது என்ன?

1791. ஓபியம் என்ற மருந்து எந்தத் தாவரத்திலிருந்து கிடைக்கிறது?


1792. அயோடின் என்ற ரசாயனம் எதிலிருந்து பெறப்படுகிறது?

1793. மகாபாரதக் கதையில் பீஷ்ம பிதாமகரை வதைப்பதற்கென்றே பிறந்ததாகச் சொல்லப்படும் பாத்திரம் யார்?



விடைகள்: 1772. பச்சை ஈ. (Greens Fly) 1773. மாவ் (Mauve) என்ற மெல் ஊதா நிறத்தைக் கண்டவர் ஸர் வில்லியம் ஹென்றி பெர்க்கின்ஸ். 1774. செஞ்சிலுவைச் சங்கம். 1775. கல்லக்குடி. 1776. மத்தியதரைக் கடலில். 1777. பைரனீஸ் மலைத் தொடர். 1778. ஸ்காட்லாந்து. 1779. Voluntary Health service Hospital அடையாறில் உள்ளது. 1780. பசிபிக் கடல், இந்துமாக் கடல். 1781. சீனாவிலிருந்து. 1782. நிகராகுவா, பனாமா நாடுகள். 1783. ஆர்க்டிக்கில் வாழும் ஒரு வகை நாய். 1784. அவானின் அன்னம். (The Swans of Avon) என்று. 1785. கிரிக்கெட். 1786. குரோகடைல் - Crocodile. 1787. கழுகு இலச்சினை. 1788. கரடித் தீவு. (Bear Island). 1789. போதி விருக்ஷம் 1790. உருளைக் கிழங்கு. 1791. Poppy என்ற செடியிலிருந்து. 1792. கடல் தாவரங்களிலிருந்து. 1793. சிகண்டி

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று !

MAFATLAL GROUP

நிச்சயமாக, மபத்லால் க்ரூப் அளிப்பவை நேர்த்தியான துணிமணிகள்தான் !

AIYARS-M. 458 TM



சேதி...இனிய சேதி...
வந்துவிட்டது இதோ
காப்லின்ஸ்!!
PARLE
gobblins
FRUITY TOFFEES
புதிய
காப்லின்ஸ்
ஃப்ரூட் டாஃபி
ருசியோருசி...
ருசித்திட குஷி!
எலுமிச்சை, அன்னாசி, ராஸ்ப்பெரி, ஆரஞ்சு சுவைகளிலே
வருகின்றன காப்லின்ஸ் ஃப்ரூட் டாஃபீக்கள்.
பார்லே
everest/734/PP-tm